விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 17 புதன்கிழமை (30.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 101

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
கோ
சீமெந்து

# விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள்

# சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்கும்

## எரிக்கிடம் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு

(நமது நிருபர்)



**தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இலங்கை இராணுவத்தினரால் தொடர்ச்சியாக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் சம்பவங்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் சமாதான நடவடிக்கைகளையும் பாதிக்கும் எனவும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.**

(உ ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் நேற்று ஹர்த்தால்

(கல்முனை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட மூன்று போராளிகள் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து திருக்கோயில் மற்றும் ஆலையடி வேம்புப் பிரதேசங்களில் நேற்று முழு கடையடைப்பு போராட்டம் நடாத்தப்பட்டது.

இதனால் பாடசாலைகள் அரச திணைக்களங்கள் என்பனவும் இயங்கவில்லை. போக்குவரத்துச் சேவைகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

வீதிகள் எங்கும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன் மக்கள் சில பகுதிகளில் கூட்டமாக நின்று விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன் எதிர்ப்புப் பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

இதேவேளை வீதிகளில் போட்டு எரிக்கப்பட்ட ரயர்களை அகற்றும் நடவடிக்கைகளில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டனர்.

இன்றும் பூரண கடையடைப்பை மேற்கொள்ள அப்பகுதி மக்கள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

# சுமாத்ரா பூமியதிர்வில் 2000 பேர் வரை பலி

இந்தோனேசியாவில் சுமாத்ரா தீவின் மேற்கு கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கடும் நில நடுக்கத்தினால் 2000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி தெற்காசியாவில் பேரழிவை ஏற்படுத்திய பயங்கர நில நடுக்கம் ஏற்பட்ட பகுதியில் இருந்து 100 கி.மீ. தொலைவில் 30 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டுள்ள இந் நில நடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 8.7 அளவாக பதிவாகியுள்ளது.

சுமாத்ரா தீவை ஒட்டிய கடற் பகுதியில் உள்ள நயாஸ் எனும் தீவு இந் நில நடுக்கத்தில் கடும் பாதிப்புக்குள்ளானது. அங்கு மட்டும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று இந்தோனேசிய அரசு அறிவித்துள்ளது.

நில நடுக்கத்தின்போது கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களே பலியாகியுள்ளனர். நில நடுக்கம் 8.7 அளவிற்கு பதிவானதால் இந்தியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு கடலோர பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஆனால் கடல் கொந்தளிப்போ அதன் காரணமாக சுனாமி அலைகளோ உருவாகவில்லை. எனினும், கடலில் சிறு சிறு தாக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. கடந்த டிசம்பர் 26 நில நடுக்கத்தை ஒப்பிடும்போது இந் நில நடுக்கம் குறைவான தாக்கத்தையே கொண்டுள்ளது என்று நில வியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (ச)

## ஐ.நா. செயலர் பதவிக்கு ஜயந்த தனபால போட்டி

2006 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தேர்தலில் இலங்கை அரசு சார்பில் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால போட்டியிடுகிறார்.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை அரசு நேற்று வெளியிட்டுள்ளது. ஜயந்த தனபால்வுக்கு ஆதரவு திரட்டுமாறு தனது தூதரகங்களுக்கு அரசு தகவல் அனுப்பியுள்ளது.

2006 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள இத் தேர்தலுக்கு தற்போதே ஆதரவு திரட்டுவது என்பது மிகவும் முந்தைய காலமாக இருந்தாலும் அப்பணிகளை உடனேயே ஆரம்பிக்க அரசு அறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிபாய்ந்த கல்லில் பலியான மாவீரர்களின் வித்துடல் விதைப்பு

புலிபாய்ந்தகல் பகுதியில் கடந்த 26.03.2005 அன்று விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றிற்கு உணவு வழங்கிவிட்டு திரும்பும்போது கருணா என்ற பேரில் இயங்கும் இராணுவத்தினர் வெட்டிக் கொலை செய்த சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன். இறைமாறன் (அருள்ராசா சஞ்சயன்) முனிகோவிலடி கோப்பாய் தெற்கு கோப்பாய் மற்றும் மேஜர் புகழமுதன் (கிருஷ்ணபிள்ளை சிவநேசன்) கரவெட்டி ஆகிய மாவீரர்களது வித்துடல்கள் நேற்று விதைக்கப்பட்டன.

மாவீரர் இறைமாறனின் வித்துடல் 3.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டு வீரவணக்க கூட்டம் நடைபெற்றது. கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ந. சிவகடாச்சம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவீரரின் தந்தையார் அருள்ராசா பொதுச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது. நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டதன் பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனியாக எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாலை 6.30 மணியளவில் பூரணமரியாதையுடன் வித்துடல் விதைக்கப்பட்டது.

இதேவேளை மேஜர் புகழமுதனின் புகழுடல் அவரது சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டு அவரது வீட்டில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு நேற்று கரவெட்டி கவுந்தில் முன்பள்ளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கரேஜஸ் அமெரிக்க கப்பல் கொழும்பை வந்தடைந்தது

அமெரிக்காவால் இலங்கை கடற்படைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட கரேஜஸ் என்ற கரையோர பாதுகாப்புக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கை வந்த அக் கப்பலை இலங்கைக் கடற்படை கப்பல்கள் வரவேற்றன.

கப்பல் கையளிக்கும் நிகழ்வு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மற்றும் இலங்கை கூட்டுப்படைத் தளபதியும், கடற்படைத்தளபதியுமான தயா சந்தகிரி ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

கடந்த மாதம் 19 ஆம் திகதி அமெரிக்காவின் கிழக்கு கரையோரத்திலிருந்து புறப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கடலில் மீட்ட இலங்கையரை அழைத்துவர விசேட பொலிஸ் குழு

(கொழும்பு)

செங்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கையர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கையிலிருந்து விசேட பொலிஸ் குழு எகிப்து செல்கிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவியுடன் இக்குழு அங்கு செல்கிறது. அத்துடன் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அழைத்துச்செல்லும் நால்வர் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோதக் குடியேற்றங்களை தடுக்கும் பிரிவின் பணிப்பாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் புகழமுதனின் குடும்பத்தினர் புலனாய்வுத் துறையால் விசாரணை

(துன்னாலை)

புலிபாய்ந்த கல்லில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட மேஜர் புகழமுதனின் குடும்பத்தினரை இராணுப் புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருவதாக அவர்கள் விடுதலைப் புலிகளிடம் முறையிட்டுள்ளனர்.

தமது வீட்டிற்கு வரும் புலனாய்வுத் துறையினர் தம்மைத் துருவித் துருவி விசாரித்து வருவதாகவும் இதனால் தமக்கு ஆபத்து நிலை ஏற்படக்கூடும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ச-101)

EXPOAIR யாழ் கொழும்பு எக்ஸ்போ ஏயார்
தினசரி விமான சேவை
T.P. 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi.com,
வானத்தில் உங்கள் நண்பன்...

# செய்திச் சிதறல்

## விசேடபொதுச்சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம் இன்று விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒன்றை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடாத்தவுள்ளது.

முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து மருந்தகங்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (க)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழவளின் 'எல்லை காக்கும் இல்லங்கள்' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கிளிநொச்சி கலை பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-9)

## 'கள்' விலை வீழ்ச்சி

(ஊற்காவற்துறை)

பனை - தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் கள்ளுத் தவறணையில் தற்பொழுது ஒரு போத்தல் பனங்கள்ளின் விலை 20 ரூபாவாக விற்கப்படுகிறது.என முகாமையாளர் க.தேவதாஸ் தெரிவித்தார். (க)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவின கீழ் ரஷ்ய குடியரசு மூலம் வழங்கப்படவுள்ள பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில்களுக்கு தகுதியான விண்ணப்பதாரி, தெரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கை நெறிகளாக பொறியியல் விஞ்ஞானம், விவசாயம், மொழியாராட்சி என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் செயலாளர் கல்வியமைச்சு உயர் கல்விப்பிரிவு, இல.18 ரோட்பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியிட்டு ஏப்ரல் 18ம் திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.(க்-21)

## சுனாமி முத்திரை வழங்கியதில் பாரபட்சம்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேசத்தில் சுனாமி முத்திரை வழங்கியதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும், கடல் உணவை வியாபாரம் செய்பவர்களுக்குமே சுனாமி முத்திரை வழங்கப்பட்டுள்ளது என்றும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பலருக்கு சுனாமி முத்திரை வழங்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது. (க-75)

## நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

(ஊர்காவற்துறை)

அனைலைதீவுப் பகுதியைச் சேர்ந்த 90 பேர் தங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

அனலைதீவு பகுதியைச் சேர்ந்த 90 பேர்தங்களுக்கு நேற்றுமுன்தினம் நிவாரணம் வழங்குமாறு கோரி ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு நேரில்வந்து தங்களின் கோரிக்கையினை விடுத்தனர்.

அங்கு வந்த மக்கள் தாம் சுனாமி நிவாரணம் ஏனைய நிவாரண உதவிகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தங்களுக்கு வழங்கவேண்டிய நிவாரணங்களை வழங்குமாறும் கோரினார்கள். (க-75)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கமாட்சி அம்பாள் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (க)

## வலைப்பந்தாட்ட கரப்பந்தாட்டப் போட்டி

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேச பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் யா/ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தினை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியும், இரண்டாம் இடத்தினை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழக அணியும் பெற்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தினை தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணியும், இரண்டாம் இடத்தினை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியும்பெற்றது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தினை காந்திஜீ விளையாட்டுக்கழக அணியும், இரண்டாம் இடத்தினை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியும் பெற்றுக்கொண்டது. (க-75)

## கடும் வெப்பம்

(ஊர்காவற்துறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்துறைப்பிரதேசத்தில் கடும்வெப்பம் நிலவுவதால் மக்கள் கடற்கரையோர மரங்களை நாடி வருகின்றனர். (கு)



இலங்கையின் கடற்கோள் அனர்த்தத்தை மையமாக்கி உருவான திரைப்படத்தின் ஒளிப்பதிவுகள் முடிவுற்ற நிலையில் படத்தொகுப்பு வேலைகள் தொடங்கியுள்ளது.

## சுனாமி எச்சரிக்கையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பரவலாக நேற்று முன்தினம் இரவு சுனாமி அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து வடக்கு கிழக்கு மற்றும் தென்னிலங்கையில் நேற்றைய தினம் இயல்பு வாழ்கையில் பாதிப்புஏற்பட்டது.

சாதரண நாட்களைப் போல்அல்லாது நேற்று கொழும்பு காலிவீதியில் வாகனப் போக்கு வரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

தென்பகுதியில் பொதுவாக பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவுகுறைவாகக் காணப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கம் மற்றும்தனியார் அலுவலக ஊழியர்களின் வரவிலும் பாதிப்பு ஏற்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது இதே வேளை வடமராட்சியில் வல்வெட்டித்துறை பருத்தித்துறை, மணல்காடு போன்ற கரயோரப்பகு திகளில் உள்ள மக்கள் கடலைப்பார்த்தவாறு நின்றனர்.

தமது வழமையன செயற்பாட்டில் அவர்கள் ஈடுபட்டபோதும் சுனாமி நிலை ஏற்படுமோ என்ற அச்சத்தில் அவர்கள் தமது நேற்றைய பொழுதை கழித்தனர். அத்துடன் நேற்றிரவு கரயோரப்பகுதியை சேர்ந்த மக்கள் தமது இடங்களில் இருந்து விலகி உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்தனர். (ச-7.9)

## பாதிப்புற்ற மீனவருக்கு எரிபொருள் மானியம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற் றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கடல் தொழிலாளர்களுக்கும் 7ஆயிரம் ரூபாய் முதல் முப்பது ஆயிரம் வரை இந்த மானியக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறிய மீன்பிடி படகுகளை வைத்திருப்போருக்கு 7ஆயிரம் ரூபாவும் பெரிய படகுகளை வைத்திருக்கும் மீனவர்களுக்கு 30ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதற்கென அரசாங்கம் முப்பது கோடி ரூபாவை செலவிடவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கடற்றொழிலாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என கடல் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (க-9)



இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று வலம்புரிக்கு விஜயம்செய்தது. இங்கு வந்த அக்குழுவினர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் பிரதம ஆசிரியர் உள்ளிட்ட குழுவினருடன் கலந்துரையாடினர்.

அக்குழுவில் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி மனீக் மெண்டிஸ், தமிழ் ஊடகப்பிரிவு முறைப்பாட்டு அதிகாரி எம்.எஸ்.அமீன் ஹுஸைசன், இலங்கைப் பத்திரிகை நிறுவனத்தின் ஆலோசகரும், சுவீடன் நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியுமான யொஹான் ரெமாரே ஆகியோர் அடங்குவர்.

# படையினரின் திட்டமிட்டசெயலே குயிலின்பன் மீதான தாக்குதல்

## மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரயன்

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்.

இவருடன் மேலும் 8 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் போராளி ஏகலைவனை சிறிலங்கா அதிரடிப்படையினரும், பொலிஸாரும் கைது செய்து மண்டானா நலன்புரி நிலையத்தில் வைத்து காரணமின்றித் தாக்கியுள்ளனர்.

இது குறித்து விசாரிக்கச் சென்ற அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட்ட 9 பேரை காஞ்சிரங் குடா அதிரடிப் படை முகாமில் இருந்து வ்ந்த மேலதிக படையினரும் நலன்புரி நிலையத்தில் முகாமிட்டிருந்த படையினரும் சேர்ந்து மேசமாகத்தாக்கியுள்ளனர்.

படுகாயமடைந்த குயிலின்பனும் போராளியும் அவசர சிகிச்சைக்காக கல்முனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

தாக்குதலுக்காக துப்பாக்கிகள், மரப்பலகைகள், பொல்லுத்தடிகள் என்பன தயாராக வைத்திருந்து பயன்படுத்தப்பட்டன. இது திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது தவிரவும் காஞ்சிரங் குடா முகாம்வழியாக பயணம்செய்த வேறு மூன்று போராளிகளையும் கூட அதிரடிப்படையினர் தாக்கியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தைக் கண்டு திகிலுற்ற மண்டானா நலன்புரி நிலைய மக்கள் தமது முகாமில் இருக்கும் படைகள் உடனடியாக வெளியேறவேண்டும் என்றும், அவர்கள் வெளியேறும் வரை அங்கிருந்து போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவை திரும்பிச்செல்ல விடப் போவதில்லை எனவும் நேற்றுமுன்தினமிரவு வரை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் திருக்கோவில் பகுதியில் உள்ள சுனாமி அகதி முகாமுக்கு நேற்றுமுன்தினம் காலை வடுத்லைப் புலிகள் சென்று அங்கிருந்த 17வயது இளஞர் ஒருவரை கடத்திச் செல்ல முற்பட்டமையினாலேயே அதிரடிபடையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் இடம் பெற்றது.

இளைஞன் கடத்தப்பட்டபோது அப் பகுதியிலிருந்து கூக்குரல் சத்தம் கேட்டது. அப்போது முகாமிலிருந்த விசேட அதிரடிப்படையினரும, பொலிஸாரும் அங்கு சென்றனர். அவர்கள் வருவதைக் கண்ட கடத்தல்காரர்கள் ஓடிவிட்டனர்.

பின்னர் அங்குவந்த விடுதலைப புலிகளின் உறுப்பினர்களில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டார் என அவர் தெரிவித்தார்.

பின்பு அவர்கள் அங்கிருந்து வெளியேறி முப்பதிற்கும் மேற்பட்டவர்களை அழைத்துக்கொண்டு அகதிமுகாமுக்குச சென்று வலுக்கட்டாயமாக இளஞனைக் கொண்டு செல்ல முயன்றனர். அப்போது அங்கு மோதல் சம்பவம் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளை விரட்டுவதற்காக அதிரடிப்படையினர் ஓரளவு பலத்தை பிரயோகிக்க வேண்டியதாயிற்று இதனையடுத்து அதிரடிப் படையினர் தரப்பில் 5 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தறபோது போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை நடாத்திவருகின்றனர் என்றார். (ச-4)

### பத்திரிகையாளருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி வேலைத்திட்டத்தினைப் பார்வையிட வருகை தரும் அகில உலக கரித்தாஸ் நிறுவன பொதுச் செயலாளரும் பிரதிநிதிகளும் நாளை வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு பஸதியன் ஹோட்டலில் பத்திரிகையாளர்களை சந்திக்கவுள்ளனர். (க)

# விளக்க மறியலில் உள்ள சந்தேக நபர்களை பொலிஸார் துன்புறுத்தி வருகின்றார்கள்?

(கொழும்பு)

பொலிஸாரினால் பொலிஸ் நிலையங்களில் சிறைவைக்கப்படும் சந்தேக நபர்கள் தொடர்ந்தும் துன்புறுதலுககு உள்ளாகின்றார்கள் என்று குற்றம் சாட்ட்ப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மனிதஉரிமைகள் பாரியளவில் மீறப்படுவதாகவும் பல தரப்பினராலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்.

பொலிஸார் சட்டப்படியே தமது கடமைகளை மேற்கொள்கின்றார்கள்.

இந்த அடிப்படையில் மனித உரிமைகள் மீறும் சம்பவம் எதுவும் இடம்பெறுவதில்லை.

பொலிஸார் குற்றச் செயல்களை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸாருக்கு எதிரான குற்றச்செயல்கள் அனைத்தும் பொலிஸ திணைக்களத்தினால் நன்கு விசாரிக்கப்படுகின்றது என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (க-9)

# சுனாமிச் செய்தியால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில நடுக்கம 8.5 ரிக்ட்ரர் ஆக இருப்பதால் மீண்டும ஆழிப்பேரலை ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவுகளில் இலங்கை நேரப்படி நேறறுமுன்தினம் இரவு 10.10 மணியளவில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக இலங்கையிலும ஆழிப்பேரலையின் தாக்கம ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக கரையோரப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிப் பாதுகாபபான இடங்களில் தஞ்சம் பெற்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேசியா சுமாத்திரா தீவுகளில் ஏற்பட்ட 9.0 ரிக்ட்டர் நில நடுக்கம் காரணமாக ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் இலங்கைக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன.

இப்போது ஏற்பட்ட நில நடுக்கம் 8.5 ரிக்ட்ரர் ஆக இருப்பதால் மீண்டும ஆழிப்பேரலை ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

மக்களை பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்லுமாறு ஊடகங்கள் ஊடாகவும், ஒலிபெருக்கிகள் ஊடாகவும் அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் இரவு கையில் அகப்பட்ட பொருட்களுடனும் உடுத்த உடையுடனும் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு அந்த இடங்களை நோக்கிச் செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

நள்ளிரவு நேரம் என்பதால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் நேரடியாக மதவழிபாட்டு தலங்களையும் பாடசாலைகளையும் நோக்கியே சென்று கொண்டிருந்தார்கள்.

குறிப்பிட்ட மக்களில் ஒரு பகுதியினர் இரவு நேரம் எங்கே செல்வது என்று தெரியாமல் வீதியில் நின்று கொண்டிருந்தார்கள். (க)

# இராசி பலன்

30.03.2005
பங்குனி 17, புதன்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.55 மணிவரை
அனுசம் முன்னிரவு 11.39 மணிவரை
இராகுகாலம் 12.12 - 1.42 மணிவரை
சுபநேரம் 4.42 - 6.12 மணிவரை
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் விரோதம், பிரயாண பயம், காரிய தடங்கல், பணவிரயம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, போசன சுகம், மாதர் நட்பு, தேகநலன். |
| மிதுனம் | சத்துரு ஜெயம், நல்ல சம்பவம், ஆரோக்கியம், போசன சுகம். |
| கடகம் | குடும்பக் கவலை, சிறுவியாதி, காரிய தாமதம், சொத்துப் பிணக்கு. |
| சிங்கம் | தனவிரயம், மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம். |
| கன்னி | கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம், நற்கீர்த்தி. |
| துலாம் | அதிக செலவு, மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, கௌரவக் குறைவு. |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, வெகுமானம், சயன சுகம், மாதர் நட்பு. |
| தனுசு | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், தனவிரயம், காரிய தாமதம். |
| மகரம் | சயன சுகம், தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| கும்பம் | நன்கொடை, எடுத்த காரியம் கைகூடும், உற்சாகம், போசன சுகம். |
| மீனம் | தேகாந்திர வாசம், உத்தியோக பங்கம், முயற்சி தாமதம், கட்டுப்பாடு. |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

—வளவன்

# குழந்தைப்பால்மாவில் பன்றிக் கொழுப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தில் பாதிப்புக்குளளான மக்களுக்கு வழங்கப்படும் குழந்தைகளுக்கான பால்மாவில் பன்றிக் கொழும்பு கலக்கப்பட்டுள்ளமை தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் விநியோகிக்கப்பட்ட அமெரிக்க தயாரிப்பிலான குழந்தைப்பால் உணவான றோசாநிடாவில் பன்றிக் கொழ்பபு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் ஆகில் அஹமட் சரிபுதீன் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பால்மாவில் லார்ட் எனும் பன்றிக் கொழுப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

இதனால் இவ்வாறான உணவுகளின் தன்மையை ஆராய்ந்த பின்னரே பாவிக்க வேண்டும் எனவும் டாக்டர் ஆகில் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் இந்த பொருட்களை கண மூடித்தனமாக பாவிப்பதைத தவிர்த்துக் கொள்ளவேண்டுமெனவும் டாக்டர் ஆகில் குறிப்பிட்டுள்ளார். (7-9)

# ஜே.வி.பி. தலைவர் இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தியாவுக்குப் பயணமாகியிருக்கிறார்.

இந்திய கம்யூனிசக் கட்சியின் அழைப்பின் பேரில் சென்றுள்ள இவருடன், பிரதி அமைச்சர் விமல் ரட்ண நாயக்கவும் சென்றுள்ளார்.

பஞசாப்தலைநகர் சண்டிகில் நடைபெறவுள்ள 19 ஆவது கம்யூனிச மாநாட்டில் பங்கேற்பதற்காவே இவர்கள் இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# லஞ்ச ஊழல் ஆ.குழுவுக்கு மூன்று அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பதவி வெற்றிடங்ளை நிரப்புவதற்காக மூன்று மேலதிகாரிகளை நியமித்துள்ளார்.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மைலுக்கு தலைமைப் பெறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.எதிசூரிய, ஓயவுபெற்ற பொலிஸ்மா அதிபர் பி.ஐ.எடிசில்வா ஆகியோர் ஏனைய அங்கத்தவராவர்.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் நியமணங்கள் உடனடியாக அமுலுக்கு வருகின்றன என்று ஜனாதிபதி செலயகம் அறிவித்துள்ளது. (க-9)

# விண்ணப்பம் கோரல்

த்றன் அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பக்கல்வி அமைச்சின கீழ் திறன் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. திடகாத்திரமான 18-45க்கு இடைப்பட்ட வயதுடைய பட்டதாரிகள் ஏப்ரல் 05ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப அமைச்சு, நிபுணதாமியச 354/2 எல்விட்டி கல மாவத்தை, கொழும்பு-05 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். (க-21)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## ஆதனவரி அறிவித்தல்-2005

**2005 ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 2005-03-31 ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.**

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | -15% |
| ஏனைய காணிகள் | -20% |


**நிலுவை உட்பட 2005 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252, பிரிவு XII 252 (1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.**

**காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

**கலாநிதி.க.குணராசா,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(C/1181)

# மீள்பார்வை



## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 22



### அத்தியாயம் VIII

அரசியலமைப்பைத் திருத்த முனைகின்ற ஒரு சட்டமூலம் அது மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படக்கூடுமாவென்றும் அல்லது 2/3 பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரமும் தேவையாவென்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக்கோரி அந்நீதிமன்றத்தின் முன் ஆட்சேபிக்கப்படலாம். சட்டமூலங்களின் அரசியலமைப்புச்சார்ந்த நிலையைத் தீர்மானிப் பதற்குத்தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு இருக்க் வேண்டுமெனக் கூறுகின்ற 120 ஆம் உறுப்புரை. சட்டமூலங்களின் நான்கு வகைகளைப் பட்டியலிடுகின்றது.

1. அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதென அல்லது நீக்குவதற்கானதென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்படாத ஒரு சட்டமூலம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்துமிடத்து உயர் நீதிமன்றம் தீர்மானிக்கவேண்டிய ஒரேயொரு கேள்வி அது மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படவேண்டுமா என்பதே!

2. அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டைத் திருத்துவதற்கானதென அதன் விரிவுப் பெயரில் விவரிக்கப்படாத ஒரு சட்டமூலத்தின் ஏதேனும் ஏற்பாடு விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென அமைச்சரவை அத்தாட்சி படுத்துமிடத்து அத்தகைய சட்டமூலத்தின் வேறு எற்பாடெதுவும் விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படவேண்டுமாவென்றும் அதற்கு மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகாரம் தேவையாவென்றும் 82ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டவாறு விரிவுப் பெயர் திருத்தப் பட வேண்டுமாவென்றும் உயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

3. ஒரு சட்டமூலம் அரசியலமைப்பின் திருத்தத்திற்கானதென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்பட்டிருக்குமாயின் அதற்கு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரம் தேவையா என்பதை மட்டும் உயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

4. (அரசியலமைபபை நீக்குவதற்கும் திருத்துவதற்கானதுமென அதன் விரிவுப்பெயரில் விவரிக்கப்பட்டுள்ள) ஒரு சட்டமூலம் விசேட பெரும்பான்மையுடனும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்துடனும் நிறைவேற்றப் படவேண்டுமென அமைச்சரவை அத்தாட்சிப்படுத்தியிருப்பின் அத்தகைய சட்டமூலம் தொடர்பில் உயர் நீதி மன்றத்துக்கு எவ்வித நியாயாதிக்கமும் இல்லை (உறுப்புரை 120 (ஆ))

உறுப்புரை 120(ஆ) இன் கீழான ஒரு சட்டமூலம் ஓர் அவசரச் சட்டமூலமாகக் கையாளப்படக்கூடாது உயர் நீதிமன்றம் அரசியலமைப்புக்கான 4ஆவது திருத்தம் மீதான அதன் தீர்ப்பில் அத்திருத்தத்துக்கு விசேட பெரும்பான்மையும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரமும் தேவையென்றும் அத்தகைய சட்டமூலம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லையென்றும் கூறியது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அதற்கான காரணங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் அரசியலமைப்புக்கு ஒவ்வாதனவாக எவையேனும் ஏற்பாடுகளிருப்பின் அவை எவையென்றும் தெரிவிக்கவேண்டும்.

உயர் நீதிமன்றம் அதன் தீர்மானத்தில் அரசியலமைப்பின் 82 (1) ஆம் (2) ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டியது அவசியமாவென்றும் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு விசேட பெரும்பான்மை தேவையாவென்றும் அது மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்துக்கு ஆற்றுப்படுத்தப் பட வேண்டுமாவென்றும் தெரிவிக்கவேண்டும்.

உயர் நீதிமன்றம் ஒவ்வாமைகள் இருப்பின் அவற்றை நீக்குவதற்கான திருத்தங்களின் தன்மையைக் குறித்துரைக்கக்கூடும் அத்திருத்தங்கள் ஒவ்வொன்றும் குழு நிலையில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் சட்ட மா அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்.

ஓர் அவசரச் சட்டமூலம் தொடர்பில் அரசியலமைப்புக்கு அது உடன் பட்டதாவென்ற சந்தேகம் உயர் நீதிமன்றத்துக்கிருப்பின் அத்தகைய சட்டமூலம் 123(1) ஆம் (2) ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக வேண்டும்.

சட்டமூலமொன்று அரசியலமைப்பின் உறுப்புரைகள் 1,2,3,4,7,8,9,10,11,30(2) அல்லது 62(2) இன் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாயிருந்தால் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரம் கட்டாயமானது ஏனைய விடயங்களில் விசேட பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகாரமும் தேவையாவென்பதை முடிவு செய்யவேண்டியது உயர் நீதமன்றத்தின் பொறுப்பு அதற்கிணங்க அரசியமைப்புக்கான மூன்றாவது திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க விழைக்கின்றதான 62(1) ஆம் உறுப்புரைக்கான திருத்தம் ஒரு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படவும் வேண்டுமென்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. அரசியலமைப்புக்கான நான்காவது திருத்தத்துக்கும் விசேட பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகாரமும் தேவைப்பட்டது. எனினும் அரசியலமைப்புக்கான ஒரு பிராதன திருத்தத்துக்கு (பதின்மூன்றாவது திருத்தம்) மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகாரம் தேவையில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் அல்லது பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க விழைகின்ற ஒரு சட்டமூலத்துக்கு விசேட பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகாரமும் தேவைப்படும். வாக்குரிமையும் தேர்தல்களும் பற்றிய அத்தியாயத்திற்கு மற்றொரு பிரதான திருத்தம் 2000 ஆகஸ்ட் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டது. அது உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டபோது. அதனை மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்துக்கு ஆற்றுப்புடுத்தாமல் ஒரு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாமென்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் இச் சட்டமூலம் தொடரப்படவில்லை. அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் தொடர்பல் ஒரு விசேட பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பொன்றில் அங்கீகாரமும் தேவைப்படுமென்றும் ஆனால் பொருத்தமான முறையில் திருத்தப்பட்டால் மக்கள் தீர்ப்புக்கான தேவைப்பாடு விலக்கப்படலாமென்றும் நீதிமன்றம் தீர்மானித்தது.

அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு ஒரு விசேட பெரும்பான்மை தேவையென்ற பொதுவான அரசியலமைப்புத் தேவைப்பாட்டுக்கு ஒரு விதிவிலக்கு மாகாண சபைகள் பற்றிய அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டதா அல்லது வெறும் கவனக் குறைவினால் ஏற்பட்டதாவென்பதைத் தீர்மானித்தல் கஷ்டம். உறுப்புரை154 எ(2) இன் கீழ் அரசியலமைப்பின் அத்தியாயம் Xvii அ இன் ஏற்பாடுகளை அல்லது ஒன்பதாம் அட்டவணையைத் திருத்த வேண்டுமாயின் அல்லது நீக்க வேண்டுமாயின் அதற்கான சட்டமூலம் வார்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் ஜனாதிபதியால் அவரின் ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அச் சட்டமூலம் மீதான மாகாண சபைகளின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென எல்லா மாகாண சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தப்படவேண்டும். எல்லா மாகாண சபைகளும் திருத்தத்துக்கு உடன்பட்டால் அது சாதாரண பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம். எனினும் மாகாண சபைகளில் ஏதேனும் அத்தகைய திருத்தத்துக்கு உடன்படாவிட்டால் அதனை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்படும். எனவே அரசியலமைப்பை நீக்குவதற்கும் பதிலீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலம். அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் முதலில் ஜனாதிபதியால் மாகாண சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டு மென் றும அதன்பின்னர் அது பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடப்படலாமென்றும் இதிலிருந்து தெளிவாகின்றது.

*மாகாணச் சட்டவாக்கம்*

மாகாண சபைகளை அறிமுகப்படுத்திய அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் அத்தியாயம் அ Xviiஅ என்றவாறு உட்புகுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு மட்டுப் படுத்தப்பட்ட சட்டவாக்க அதிகாரம் அளிக்கப்பட்டது. இத்திருத்தம் விடயங்களின் மூன்று நிரல்களை. அதாவது மாகாண சபை நிரல் (நிரல் i) ஒதுக்கிய நிரல் (நிரல் ii) ஒருங்கிய நிரல் (நிரல் iii) ஆகியவற்றைக் கொண்ட ஓர் அட்டவணையை அறிமுகப்படுத்தியது.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## ஜனாதிபத நிதியம் 327கோடி உதவி

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியம் கடந்த பத்தாண்டு காலத்தில் 21 ஆயிரத்து 200 நோயாளிகளுக்கு உதவிப் பணம் வழங்கியிருக்கிறது.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் சுமார் 327 கோடி ரூபா உதவிப்பணமாக வழங்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.(7)

## வருடாந்த இல்ல மெய்வல்லுநா போட்டி

(பொன்னாலை)

சரவணை -சின்னமடு றோ.க. த.க. பாடசாலையின வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.சண்முகநாதபிள்ளை தலைமையில நடைபெறும் இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை கோட்ட கல்வப் பணிப்பாளர் ச. பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வாா.

சிறப்பு விருந்தினர்களாக சின்னமடு கத்தோலிக்க ஆலய பங்குத் தந்தை வண.பிற்றர் துரைரத்தினம், சின்னமடு திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்னாள் தலைவர் வை. முருகன் ஆகியோர் கலந்து கொள்வர். (7-49)

## சரஸ்வதி சிலை திறப்பு விழா

2004ஆம் ஆண்டுவெளி மாவட்ட சுற்றுலா மேற்கொண்ட தரம் 5 மாணவாகள் அவர்களின் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அன்பளிப்பினால் உதையமான நவீன தடாகத்துடன்இணைந்த சரஸ்வதி சிலை இன்று பி.ப. 4.30 மணிக்கு ஏழாலை மேற்கு சைவ சண்மார்கக வித்தியாலயம் முன்பாக யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் சபா.ஜெயராசாவினால் திறந்து வைக்கப்படும்.

இந்நிகழ்வில் இதனை ஆககிய நல்லையா செந்தில் நாதன் பட்டம அளித்து கௌரவிக்கப்படுவார். (க)

## வடிகால்கள் சீராக சுத்தப்படுத்தப்படுவதில்லை

(பொன்னாலை)

குருநகர் பகுதியில் உள்ள கழிவு நீர் வடிகால்கள் சீராகத் துப்புரவு செயயபபடுவதில்லை என அப்பகுதி குடியிருப்பாளாகள் விசனம் தெரிவித்தனர்.

இந்த வடிகால்களை துப்புரவு செய்த காலை வேளைகளில் வருகை தரும் சுத்திகரிப்பாளர்கள் தமது கடமைகளைச் சீராக செய்வதில்லை என்றும இதனால் வடிகால்களில் பாசி படிந்து காணப்படுவதுடன் மணல் நிரமபியுள்ளதாகவும தெரிவிக்கப்படுகிறது.

வடிகால்கள சீராக துப்புரவு செய்யப்படாமையால் கழிவு நீா வழிந்து செல்ல முடியாமல் தடைப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் துர் நாற்றம் வீசுகின்றதுடன நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் மக்களால் சுட்டிககாட்டப்பட்டுள்ளது.(க-49)

## கொல்களங்கள் அமைக்க நடவடிக்கை

(பொன்னாலை)

யாழ். மாவட்டத்தில் வலய ரீதியாக 5 கொல்களங்களை அமைபபதற்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் ஆ. கோதீஸ்வரன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ. மாவட்டத்தில் கொல்களன்கள அமைப்பதற்கு பொருத்தமான காணிகள் பிரதேச சபைகளில் பெயரில் இருந்தால் அவை பறறிய விபரங்களை உடன்தமக்கு அனுப்பி வைக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க. இராசையா கேட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் உள்ள 15 உளளூராட்சி சபைகளில் 3 சபைகளை ஒன்றிணைதது ஒரு வலயமாகப் பிரகடனப்படுத்தி மொத்தம் 5 வலயங்களை உருவாக்கி ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு கொல்களங்கள் அமைக்கபபடவுள்ளன. (7-49)

## வீதிதிருத்தப்படாமையால். பொதுமக்கள் சிரமம

(நீராவியடி)

யாழ். மாநகர சபை நிர்வாகத்திற்குட்பட்ட சிவ குருநாதர் வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் இருப்பதனால் இப்பாதையை பயன்படுத்தும் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகிறார்கள்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெதுமக்களும் பயன்படுத்தும் இவ்வீதியை மாநகர சபை திருத்த முனவராமையையிட்டு பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (7)

## பொங்கல் விழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (க-9)

## வருடப்பிறப்பு விழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பார்த்திப வருடப் பிறப்பு விழா எதிர்வரும் 14ஆம் திகதி காலை 6.00 மணிககு தொடங்கி இரவு 7.00 மணிவரை நடைபெறவுள்ளது. (க-9)

## நூதன போராட்டத்தில் மின்சாரசபை ஊழியர்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் ஊழியர் ஒருவர் 80 அடி உயரமான கோபுரததில் ஏறி நின்று நேற்று முன்தினம் எதிர்ப்புப் போராட்டம் ஒனறில் ஈடுபட்டிருந்தார்.

மின்சார சபையை மறு சீரமைககும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்தப போராட்டத்தை அவர் நடத்தியிருந்தார். (க)


## 5 ஆம் தர மாணவர்களே!

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் 5ஆம் தர புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள் உங்கள் வலம்புரியில் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் வாங்கத் தவறாதீர்கள்.

கல்விப்பிரிவு,வலம்புரி.

## O/L மாணவர்களே!

உங்கள் வலம்புரியில் மிகவிரைவில் பிரபல ஆசிரியர்கள் தயாரித்த மாதிரி வினாத்தாள்களின் பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

கல்விப்பிரிவு, வலம்புரி.

# இளைய தலைமுறையை நாசமாக்கும் சினிமாக்களும் தொலைக் காட்சிகளும்

இடுப்பைக் குலுக்காத டான்ஸ இல்லை; பாலியல் கேவலங்களுக்குக் குறைவே இல்லை; உறவுகளைக் கொச்சைப்படுத்துவதற்கும் குறைவில்லை; சினிமாவில் மட்டுமல்ல, ரீ.விக்களிலும் அதன தொடர்கள் உட்பட நிகழ்ச்சிகளிலும் இவையே தொடர்கின்றன. பள்ளிக் குழந்தைகளைத் தவறான பாதையில் இட்டுச்செல்லும் அவ்வளவு விஷயங்களும் ரீ.விக்களில் பரவி வருகின்றன. இதனால் என்னவென்றே தெரியாமல் குழந்தைகள் பாலியல் அத்துமீறலுக்கு ஆளாகின்றனர்.

இந்தப் பிஞ்சுகளுக்கு எது நல்லது?, எது கெட்டது? என்பதைச் சொல்லாமல் பொத்திப் பொத்தி வளர்க்காதீர்கள். பள்ளிப் பருவத்திலே பெற்றோர்

## மூடி மறைக்காமல் குழந்தைகளுக்கும் புரியவையுங்கள்

எதுவும் சொல்லாமல் பொத்திப் பொத்த' வளர்ப்பதால் எது தவறு என்று தெரியாமலே தவறுக்கு ஆளாகி வருந்துகின்றனர்.

சிலகாலம் முன்பு இன்ரர் நெட் சேட்டிங், இப்போது மொபைல் போன், எஸ்.எம்.எஸ். மூலம் பல பள்ளிக் குழந்தைகள் கூடத் தவறான பாதைக்குச் சென்று, கடைசியில் வருந்துகின்றனர்.

எல்லாவற்றுக்கும் பெற்றோர் தான் காரணம். எந்த வசதியை, எந்தச் சலுகையை அளித்தாலும் கண்காணிப்பு முக்கியம். கல்லூரியில் காலடிவைக்கும் வளர் இளம்பெண், பருவத்தை அடையும வரை அந்த குழந்தையைப் பொத்தி வளர்ப்பதால் எந்தப் பலனும் இல்லை.

பாலியல் விஷயங்களில் இது தவறு, இது சரி என்பதை எல்லாம் அவர்களுக்குத் தெரிய வைக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமை. அப்படியிலலாமல் பொத்திப் பொத்தி வளர்ப்பதாலோ, அளவுக்கத'கமாக சுதந்திரம் கொடுப்பதாலோ பயனில்லை.

சமீபத்தில் எடுக்கப்பட்ட பல மதிப்பீடுகளில், பள்ளி இறுதியைத் தொடும், பள்ளியைத் தாண்டிய `வளர் இளம்பெணகளின் பாலியல் நாட்டத்தைப் பற்ற' விபரீத விஷயங்கள் வெளிவந்துள்ளன.

இவர்களின் சதவீதம் 20க்கும் குறைவுதான் என்றாலும், எதிர்காலத்தில் மேலைத்தேய பாணி அதிகரித்து நம் கலாசார, பண்பாட்டு புனிதத்தன்மை வெகுவாகச் சரிய வாய்ப்புண்டு.

சமீபத்தில் பெங்களூரில் மகளிர் செய்தி சேவை நிறுவன இயக்குனர் அங்கனா பரேக், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவித் தள தூதர் சுரேகா சபர்வால், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஒப் மனேஜ்மென்ட் சார்பில் கீதா சென், மத்திய அரசு பணியாளர் மற்றும் பயிற்சித்துறை அதிகாரி சலீம்ஹக் ஆகியோர் பங்கேற்று நடத்திய கருத்தரங்கில், எயிட்ஸ், பாலியல் ஆபூர்வ விஷயங்கள் பற்றிய மதப்பீட்டு முடிவுகள் சமர்ப்பிக்கபபட்டன. அதில், சில விஷயங்கள் மனதைப் பெரிதும் நெருடுகின்றன.

பத்தாண்டுகளுக்கு முந்தைய வாழ்க்கைமுறைக்கும், இப்போதைய 'லைப் ஸ்டைலுககும்' அடிபபடை வேறுபாடுகள் உள்ளன. அன்று இது தவறு, இது சரி என்பதற்கு சீரான வழ' முறைகள் இருந்தன. இது தவறானது என்ற விஷயங்கள் வெகு குறைவு. இன்று எது தவறு, எது சரி என்பதே ஒவ்வொரு தட்டு மக்களுக்கும் தனித்தனியாக உள்ளது. ஒரு தரப்பு மக்களுக்கு சரியாக உள்ள விஷயங்கள் நடுத்தர, கீழ் நடுத்தர மக்களுக்குத் தவறாக உள்ளது. பாலியல் விஷயங்களில் மேலைத்தேய பாணி, உடை, பழக்கவழக்கங்கள் எல்லாம் பணக்கார வர்க்கத்தை மட்டுமல்ல, நடுத்தர வர்க்கப் பெண்களையும் பீடித்துள்ளது.

இதன் விளைவுதான் எயிட்ஸ் என்ற பாலியல் கொடூரனின் பிடியில் ஆண்களும் பெண்களும் சிக்கித் தவிக்கின்றனர். கடந்த காலங்களை விட, இப்போது பல வகையிலும் பாலியல் வ'ஷயங்களில் நம் பாரம்பரிய புனிதத்தன்மை வெகுவாக மறைந்து வருகிறது. அதனால், எதையும் வெளிப்படையாகச் சொல்லி, விழிப்புணர்வை எற்படுத்தினால் தான் பள்ளிப் பருவத்திலேயே குழநதைகளை நல்வழிக்குக் கொண்டுவர முடியும்.

பெங்களூர் ஐ.ஐ.எம். கருத்தரங்கில் பல்வேறு அமைப்புகள், சர்வதேச அளவில் எடுத்துத்தநத மதிப்பீட்டு முடிவுகளை தொகுத்து அளித்தனர். அதில் எயிட்ஸ் பாலியல் தொந்தரவுகள், கீழைத்தேய நாடுகளிலும பரவி வருவதை அறியமுடிந்தது.

இதோ சில முக்கிய புள்ளி விபரங்கள்:

*கடந்த 2003ஆம் ஆண்டை எச்.ஐ.வி /எயிட்ஸ் பாதிப்பில் உள்ள நான்கு கோடி பேரில் பாதிப்பேர் பெண்கள் என்று தெரியவந்துள்ளது.

*இந்த எண்ணிக்கையில ஆசியா மற்றும் பசிபிக் மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் 60 சதவீதம் பேர்.



*அடுத்த ச'ல ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள் தொகையைக் கணக்கிட்டால், 50லட்சம் பேர் எச்.ஐ.வீ பாத'ப்புக்குள்ளாகும் ஆபத்து உள்ளது.

*பல சுற்றுசசூழல் கேடுகள் தவறுகளால் ஆசியா நாடுகளில் எச்.ஐ.வி அபாயம் 5மடங்கு அதிகமாகவே உள்ளது.

*தமிழ்நாட்டில் பாலியல் நோயாளிகளில் 82சதவீதம் பேர், ஒருவருக்கு மேற்படடவர்களுடன் உடலுறவு வைத்துள்ளனர்.

*இந்தியாவில் ஆண் விபச்சாரம ஓசைபபடாமல் அதிகரித்து வருகின்றது. அதுபோல, ஆண்களிடம் ஆண் உ'_லுறவு கொளளுவதும் கணிசமாக அதிகரிக்கிறது. இப்படிப்பட்டவர்களில் 90சதவீதம் பேர் திருமணமும் செய்துகொண்டுள்ளனர்.

*இந்தியாவில் பள்ளி செல்லும் 13-15 வயது மாணவிகள் பாலியல் தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படும் சூழ்நிலைகள் அதிகரித்துள்ளது.

* எச்.ஐ.வி பாதித்த தாய் கர்ப்பம், தாய்ப்பால் தருவது ஆகயவற்றால் 15 வயதுக்குட்படட குழந்தைகளுக்கும் எச்.ஐ.வி பாதிபபேற்பட்டுள்ளது.

*உலக அளவில் இப்படி பாதிககப்பட்ட குழந்தைகள் எணணிக்கை 10 லட்சம்.

* * *

## குளிர்பானங்கள் புது சக்தி அளிக்குமா?

தொலைக்காட்சிகளில் இன்று கணக்கற்ற குளிர்பான விளம்பரங்கள் வருகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் தங்கள் குறிர்பானத்தை குடித்தால் புதுத்தெம்பு, புது சக்தி கிடைக்கும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்து விளம்பரங்கள் கொடுக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் இந்தக் குளிர்பானங்களால் ஒரு தெம்பும் கிடைக்காது. அதுபோல சக்தியும் கிடைக்காது. அதற்குப் பதில் தீமைகள்தான் தாராளமாகக் கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இன்று பிரபலமாக பேசப்படும் குளிர்பானங்கள் பற்களை கண் இமை போல பாதுகாக்கும் எனாமலை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடுவதால் நாளடைவில் பற்சிதைவு ,நோய்கள் உண்டாகும். இதுபோக பற்களுக்கு வலிமை தரும் கல்ச'யம் சத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் கரையச் செய்கின்றன. கல்சியம் போத'ய அளவுக்கு இருந்தால்தான் பற்கள் உறுதியாக நிற்கும். பல் ஈறு தொடர்பான நோய்கள் வராமல் காப்பாற்றும். இந்நிலையில் குளிர்பானங்கள் அந்த சத்துக்கே வேட்டு வைத்துவிடுவதால் பற்களின் கதி அம்போதான்.

குளிர்பானங்கள் நீண்டநாள் கெடாமல் இருப்பதற்காக பயன்படுத்தப்படும் அமிலங்கள்தான் இதற்கெல்லாம் காரணம். வியாபார நோக்கில் செயல்படும் நிறுவனங்கள் மக்களின் உடல்நல்னைப் பற்றக் கவலைப்படும் என்றும் பற்களைப் பாதிக்காத வகையில் அமிலங்களைச் சேர்க்கும் என்று நினை:ப்பது தவறுதானே. நம்முடைய பற்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமானால் குளிர்பானங்களைத் தொடாமல் இருப்பது நல்லது.


குறப்பாக குழந்தைகள் இத்தகைய பானங்களுக்கு அடிமையாகாமல் பார்த்துக்கொள்வது மிக முக்கியமானது.

# ஆரோக்கியம் தரும் முட்டை

இயற்கையில் கிடைக்கும் மிகச் சிறந்த உணவுகளில் ஒன்று முட்டை. இதில் எளிதில் ஜீரணமாகும் புரோட்டீன்களும், சத்துப் பொருட்களும் ஏராளமான தாதுப் பொருட்களும் காணப்படுகின்றன. அதேசமயம் சிறிதளவுக்கு வேண்டாத விஷயங்களும் உள்ளன எனபதை மறுப்பதற்கில்லை. அதற்காக முட்டையை முழுமையாக வெறுத்து ஒதுக்குவது சரியாக இருக்கமுடியாது.

முட்டை என்றதும் அதில் அடங்கியிருக்கும் கொழுப்பு மற்றும் கொலஸ்ட்ரோல்தான் உடனடியாக நினைவுக்கு வரும். இந்த இரண்டுமே இருதய இரத்த நாளங்களுக்கு கெடுதல் செய்பவை என்பதால் பலர் முட்டையைத் தொடுவதற்குப் பயப்படுகிறார்கள். இந்தப் பயம் தெளியவேண்டுமானால் முதலில் இந்த இரண்டையும் பற்றித் தெளிவாக அறியவேண்டும்.

கொலஸ்ட்ரோல் என்பது ஏதோ நாம் சாப்பிடுகின்ற பொருட்கள் மூலம்தான் உடம்பில் சேருவதாக கருதுகிறார்கள். அதுபோல அது உடலுக்கு ஒவ்வாத பொருள் என்ற எண்ணமும் மேலோங்கி உள்ளது. இந்த இரண்டுமே தவறு.



ஏனெனில், நமது உடம்பில் உள்ள ஒவ்வொரு செல்லும் கொலஸ்ட்ரோல் இல்லாவிட்டால் உடம்பு வளர்ச்சி என்பதே இருக்காது. உடம்பில காணப்படும் 80 சதவீத கொலஸ்ட்ரோலை உடம்பே உற்பத்தி செயதுகொள்கிறது. நீங்கள் கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் சரி, அதிகமாகச் சாப்பிட்டாலும் சரி, இது இயல்பாக நடந்துகொண்டே இருக்கும்.

செல்களில் காணப்படும் கொலஸ்ட்ரோலகளால் பெரும்பாலும்நன்மை நடககிறது. இரத்தத்தில் சேமிக்கபபடும் வெறும் 7 சதவீத கொலஸ்ட்ரோல் தான் பிரச்சினையை ஏற்படுத்தும் அதுவும் ஒக்சிஷனேற்றம் அடைந்தால் ஒழ்ய (அ'ப்படி நடந்தால் இரத்த நாளங்களின் சுவர்கள் கடினமாகி இதயத்துக்கு ஆபத்து ஏற்படும்) பிரச்சினை எதுவும் இல்லை. இது தெரிந்துதானோ என்னவோ, இயற்கையே முட்டையில் ஒரு இயற்கையான நோய எதிர்ப்பு பொருளை வைத்துளளது. அதன் பெயர் **lecithin** என்பதாகும். இது முட்டையில் உள்ள கொலஸ்ட்ரோல் சிக்கலை ஏற்படுததாமல் தடுக்கிறது.

பொதுவாக முட்டையில் எதைச் சாப்பிட்டால் ஆபத்து என்று கருதப்படுகிறதோ, அதே மஞ்சள் கருவில்தான் இந்தப் பொருள் உளளதென்பது இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது.

இரத்தத்தில் காணப்படும் கொலஸ்ட்ரோலுக்கும் உணவில் காணப்படும் கொலஸ்ட்ரோலுக்கும் எந்தச சம்பந்தமும் இல்லை. ஆனால் ஒரு சிலர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருககலாம் அவர்களை கொலஸ்ட்ரோல் தேவையாளிகள் (**choles terol responders**) என்று சொல்லலாம்.

வழக்கமாக உணவு மூலம் கொலஸ்ட்ரோல் அதிகளவில் கிடைககிறது என்றால், தான் உற்பத்தி செய்யும் கொலஸ்ட்ரோலை உடம்பு தானாகவே குறைத்துக் கொள்ளும். ஆனால் இத்தகைய நபர்களுக்கு உணவு மூலமாக கிடைககும் கொலஸ்ட்ரோல் அதிகரிக்கும்போது உளளுக்குள் உற்பத்தி செய்யும் கொலஸ்ட்ரோலை குறைக்கும் வித்தையை உடம்பு செய்யாது. கொலஸட்ரோல் விஷயத்தில் இவர்கள் பிரச்சினைககுரிய நபர்கள என்பதால் சற்று உன்னிபபாக கண்காணிக்கவேண்டியுள்ளது.

முட்டையின் மஞ்சள் கருவில் **arachadonic acid** என்ற அதி முக்கியமான அமிலம் காணப்படுகிறது. இது மனித உடம்புக்கு மிகவும் தேவையான ஒரு கொழுப்பமிலம் ஆகும். உடம்பின் வளர்சிதை மாற்றத்துக்கு தேவையான இந்த அமிலம் மனிதர்களில் 20 சதவீதம் பேருக்கு பற்றாக்குறையாக இருப்பதாக புள்ளிவிபரம் சொல்கிறது. ஒருபுறம் நன்மை செய்யும் இந்த அமிலம் இன்னொரு புறம் ஆபத்தையும் உண்டாக்குகிறது.

அதாவது பல்வேறு நோய் நொடிகளை உண்டாக்கும் பொருட்களில் இது மூலக்கூறாக அமைந்துள்ளது. இத்தகைய பிரச்சினை உள்ள நபர்களை மிகவும ஆபத்தான நிலையில் உள்ளவர்களாக கருதலாம் இந்தச் சிக்கலை சமாளிக்க **aracha donic acid** மற்றும் ஒமேகா -3 அமிலங்கள் இடையே சம விகித நிலையைக் கடைப்பிடித்தால போதும் (ஒமேகா-3 அமிலம் மீன் மற்றும் மீன் எண்ணெயில் அதிக மாகக் காணப்படுகிறது). இந்த இரண்டையும் ஒழுங்காக பார்த்துககொண்டால, நீங்கள் ஒரு நாளைக்கு ஒரு முட்டை என்ன 10 முட்டை சாப்பிட்டாலும் ஒரு பிரச்சினையும் வராது.

எனவே, முட்டை என்பது நிச்சயம ஆரோக்கியமான உணவுதான.

# இந்தோனேஷியா பூகம்பத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2000

(இந்தோனேஷியா)

இந்தோனேஷியாவின் மேற்குப் பகுதியிலுள்ள நியாஸ் எனும் சிறிய தீவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட 8.7 ரிக்டர் அளவிலான பூகம்பம் காரணமாகக் குறைந்தது அயிரத்துககும் இரண்டாயிரத்துக்கும் இடைப்பட்ட மக்கள் உயிரிழந்திருக்கலாமென்று இந்தோனேஷியாவின் உப ஜனாதிபதி யூசுப் ஹலா தெரிவித்திருக்கிறார்.

மென்நோவா தொலைககாட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் 27 ஆயிரம் பேரைக கொண்ட நியாஸ் தீவில் குறைந்தது பத்தாயிரம் பேராவது பாதுகாப்புக் கருதி வெளியேறி இருப்பதாகத் தெரிவித்தார்.

இப்பகுதியில் தொடர்ந்தும் பதட்ட நிலை நிலவுகிறது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட இப்பூகம்பம், சுனாமிப் பேரலையால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி





கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஏறபட்ட பூகம்பப் பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து அண்மையில் இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

நியாஸ் தீவின் பிரதி ஆளுநர் ஆகாஷ்

களான மேற்கு இந்தோனேஷியா, இலங்கை, இந்தியாவின் கரையோரப்பகுதிகள், மலேஷியா, தாய்லாந்து ஆகியவற்றைத் தாக்கக்கூடுமென அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து கரையோரப் பகுதி மக்கள் வெளியேற்றப் படடதாவும், பலர் கரையோரத்திலிருந்து உயர்ந்த பிரசேதங்களுக்குச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதிக எண்ணிக்கையான மக்கள் கட்டட இடிபாடுகளுக்குள் அகப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாரதூரமான சுனாமியின் தாக்கம் ஏற்படலாம் என்றும், அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கவேண்டுமெனறும் பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் முன்னரே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய புவிச்சரிதவியல் பணியகம் இது தொடர்பாக தகவல் தெரிவிக்கையில்,

கொக்கோ தீவில் இரு சிறிய அலைகள பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. முதலாவது அலை 10 செனரி மீற்றராகவும் அடுத்தது 25 சென்ரி மீற்றரையும் கொண்டிருந்தன.

அமெரிக்க புவிச்சரிதவியல் மதிப்பீட்டுப் பேச்சாளர் டொன் பிளட்மன் தெரிவித்த தகவலில் இப் பூமியதிர்வு ஓரளவு பாரிய பூகம்பமாகும் என்று தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை இப்பூகம்பத்தில் 300 பேர் இறந்துள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (7)

# குதிரை சவாரியில் அசகாயசூரன்



குதிரைச் சவாரி செய்வதில் அசகாய சூரனான உலக அரங்கில் திகழ்பவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ராபாட் ஸ்மித். இவர் சமீபத்தில் சுவீடன் நாட்டிலுள்ள கோடிபார்க் நகரில் நடந்த குதிரைச் சவாரிப் போட்டியில் கலந்துகொண்டார்.

குதிரை தாவிக்குதித்கும் பிரிவில் ராபாட் ஸ்மித் தன் குதிரையை லாவகமாகத் தட்டிக்கொடுத்து அதிக உயரம் பாயச் செய்து போட்டியில் வெனறு உலக கோப்பையையும் தட்டிச்சென்றுவிட்டார். (து)

# பாகிஸ்தானுக்கு எப்-16 ரக விமானம்

அமெரிக்காவிடமிருந்து எப்-16 ரக போர் வீமானங்ளை வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் பற்றிப் பேச அமெரிக்கப் பாதுகாப்பு நிபுணர்கள் குழு விரைவில் பாகிஸ்தான் வருமெனத் தெரிகிறது.

ஒவ்வொரு போர் விமானத்தின் விலை 150 கோடி முதல் 180 கோடி வரையாகும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் உதவியாக இருப்பதால் இவ் விமானங்களை வழங்க அமெரிக்கா முன்வநதுளளது.

விமானங்களுக்கான தொகையைச் செலுத்தும்முறை, விமானத்தில் பொருத்த வேண்டிய கருவிகள குறித்து நபுணர்களுடனான பேச்சுவார்த்தைக்குப் பின் முடிவு செய்யப்படும்.

இவ்விதம் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எப்-16 போர் விமானங்களை அளிப்பது தொடர்பாக இந்தியா ஏற்கெனவே அமெரிக்காவிடம் தனது ஆட்சேபனையைத தெரிவீத்துள்ளது. (து)

WORLD NEWS
உலக தரிசனம்



சென்னை சாந்தோம் சர்ச் பின்புறத்தில் உள்ள மக்கள் சுனாமி பீதியில் வீடுகளைக் காலி செய்துகொண்டு மூட்டை முடிச்சுடன் வீதியில் நடந்து செல்கின்றனர்.

# லெபனான் வன்முறை
## சர்வதேச நாடுகள் கண்டனம்

(பேருத்)

லெபனானில் தொடர்ந்து நடைபெறும கார்க்குண்டு வெடிப்புச் சம்பவங்களைத தொடர்நது, வன்முறைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனறு அதிபர் எமிலி லாகோத் கூறினார்.

பேருத்தில் நடைபெற்ற ஈஸ்ரர் விழாவில் பங்கேற்ற பிறகு அவர்,

"வன்முறையைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து, நாட்டைக் காப்பாற்ற வேண்டும்" என்றார்.

லெபனான் நாட்டில் இப்போது நிலையான அரசு இல்லை. சிரியா நாட்டு துருப்புகள் லெபனானை விட்டு விலகிவிட்டன. இந்நிலையில் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி முன்னாள் பிரதமர் ரஃபீக் ஹாரிரி படுகொலை செய்யப்பட்டார். அதன்பிறகு கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில தற்கொலைப் படையினரின் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தொடர் வன்முறைச் சம்பவங்களைச் சர்வதேச நாடுகள் கண்டித்துள்ளன. ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனான் மற்றும் உயர் அமெரிக்கத்தூதரும் லெபனானுக்கு வருகை தரவுள்ளனர். (து)

# சயிக்கிள் குண்டு வெடித்ததில் — ஈராக்கில் 2 பேர் பலி



(பாபல்)

ஈராக்கின் புனித நகரமான நஜாப் அருகே நேற்றுமுன்தினம் சைக்கிளில் வைக்கப்பட்ட குண்டு வெடித்தது.

இதில், ஈராக் பொலிஸார் இரண்டு பேர் பலியாயினர்.

ஈராக்கில் பாதுகாப்புப் படையினர் மீது தீவிரவாதிகள் தொடர்தாக்குதலை நடத்திவருகின்றனர். புனித நகரமான நஜாப்பில் கடந்த சில நாட்களாக இந்தத் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதல் தொடர்ந்தது. அடையாளம் தெரியாத மர்ம நபர் வெடிகுண்டு வைக்கப்பட்ட சைக்கிள் ஒன்றைப் பொலிஸ் வாகனத்தின் அருகே நிறுத்திவிட்டுச்சென்றார். அவர் செனற சிறிது நேரத்திற்குள் சைககிள் குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் ஈராக் பொலிஸார் இரண்டு பேர் பலியாயினர். மேலும, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸார் உட்பட சிலர் படுகாயமடைந்தனர். (து)



சாஷ்ட்ரா சீமா பல் என்ற படையின் 42ஆவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் புதுடில்லியில் கொண்டாடப்பட்டது. விழாவில் அப் படைவீரர் ஒருவர் தீ வளையத்திற்குள் நுழைந்து செல்லும் காட்சி.

# செவித்திறன் மிக்க யானைகள்

யானைகளுக்கு செவித்திறன் மிக அதிகமாக இருப்பதை விஞ்ஞானிகள் உறுதிசெய்துள்ளனர்.

அதைவிட ஆச்சர்யம் அவை மிமிக்ரி செய்வதுதான்! பிற யானைகளைப் போலவும் வாகன சத்தங்களைப் போலவும் கூட சப்தம் செய்வதை நோர்வே - அமெரிக்கா ஆராய்ச்சியாளர்கள் பதிவுசெய்துள்ளனர். இதுகுறித்த செய்தி பிரிட்டனின் 'நேச்சர்' பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

கென்யாவில் உள்ள 10 வயது பெண் யானை வாகனங்கள் செல்லும் ஒலியை அப்படியே மிமிக்ரி செய்கிறதாம். இத்தனையும் சாலையிலிருந்து 3 கிலோமீற்றர் தூரம் தள்ளித்தான் அந்த யானை இருக்கிறதாம். காலிமெரா என்ற 23 வயது ஆபிரிக்க ஆண் யானை 18 ஆண்டுகளுககு ஆசிய பெண் யானைகள் இரண்டுடன் சுவிற்சர்லாந்தில் ஒரு சரணாலயத்தில் இருந்தது. அது தற்போது ஆசிய யானைகளின் உற்சாக பிளிறல்களை அப்படியே செய்து காட்டுகிறதாம்.

ஏற்கெனவே பறவைகள், டொல்பின்கள் ஆகியவை புதிய குரல்களைக் கற்றுக் கொள்ளும் திறன் படைத்தவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. தற்போது பாலூட்டிகளில் முதலாவதாக இப்பெருமை யானைக்கு கிடைத்துள்ளது. (து)



பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர்களுள் ஒருவரான குவாசி ஹுசை அகமது மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து அரசை எதிர்த்துப் பேரணி நடத்தினார்.

# சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோதும் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் நாட்டிற்கு பேரிழப்பு ஏற்பட்டபோதிலும் அவற்றை மீறி நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்றது.

எனினும், அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக அவர்களது உதவியுடன் நாட்டு மக்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை வழங்கமுடியும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருக்கிறார்.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 3மாதங்கள் பூர்த்தியாவதையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவருடன் சரத் அமுனுகம, நிமால் சிறிபாலடிசில்வா ஆகியோரும் அவ்வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள், கல்வி, சுகாதார துறைகளின் மேம்பாடு, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை உட்பட பல விடயங்களைப் பற்றியும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை மின்சார சபைக்கும், பெற்றோலியக் கூட்டுததாபனத்திற்கும் தலா 80கோடி ரூபா கடன் பழு ஏற்பட்டுள்ளது. ஆயினும் அதன் தாக்கம் பொது மக்களுக்கு ஏற்படாத வகையில் இந்த இரு நிறுவனங்களும் பாதுகாக்கப்படுவது அவசியமாகும்.

இலங்கை போக்குவரத்துச் சபையும், ரயில்வே திணைக்களமும் கூட நட்டத்திலேயே செயற்படுகின்றன. அவற்றையும் பாதுகாக்கவேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற போதிலும் நாடு 55 சதவீதம் பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# இனந்தெரியாத சில நபர்கள் வீட்டிலுள்ளோர் மீது தாக்குதல்

## கட்டப்பிராயில் சம்பவம்

(கல்வியங்காடு)

கல்வியங்காடு கட்டைப்பிராய் 3ஆம் கட்டை குளத்தடிப் பகுதியில் இரவு வேளையில் வீடொன்றுக்குச் சென்ற இனந்தெரியாத சில நபாகள் அவ்வீட்டிலிருந்தவர்களைத் தாக்கிவிட்டு தப்பிசசென்றுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வேலும் மயிலும் அசோக்குமாா (வயது-19) என்பவர் தலையில் படுகாயமடைந்து யாழ. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நடைபெற்ற பினன் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, கோபபாய் பொலிஸ் அதிகாரி அருணகிரி செல்வம் தலைமையிலான குழுவினா குறித்த வீட்டை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

இதேபோன்று அதே தினத்தில் கட்டைப்பிராய்ப் பகுதியில ஆட்டோவில் வந்த ஒரு குழுவினா கடையொன்றினையும் தாககிவிடடுத் தப்பியோடியுள்ளனர். (7-74)

# பாதை திறக்கப்பட்டது

(பொன்னாலை)

கடந்த பல வருடங்களாகப் பொதுமக்கள் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி, கச்சாய் வீதியிலிருந்து புகையிரதப் பாதையூடாகத் தனங்களப்பு வீதிக்குச் செல்லும் பாதை திறந்துவிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள குடியிருப்புக்களில் இடம்பெயர்ந்திருந்த முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்ந்ததையடுத்தே இவ்வீதி திறந்துவிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (7-49)

# கஷ்டப்பிரதேசத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளும் நவீனமயப்படுத்தப்படுமாம்

(கொழும்பு)

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கஷ்டப் பிரதேசங்களில், தலா ஒவ்வொரு வைத்தியசாலை சகல வசதிகளையும் கொண்ட நவீன மருத்துவசாலையாக அபிவிருத்தி செய்யப்படும என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கென 39 வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சா நிமால் சறிபால டி சில்வா இது தொடாபாக தகவல் தெரிவிக்கையில்,

இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படும் சகல வைத்தியசாலைகளும் சிறந்த உட்கட்டமைப்பும், வைத்திய உபகரணங்களையும், மருந்துவகைகளையும் கொண்டிருக்கும என்று தெரிவித்தார்.

வைத்தியசாலைக்குத் தேவையான சகல ஊழியர்களும் நியமிக்கப்படுவார்கள் என்றும் மக்களுக்கு சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெய்க்கா நிறுவனம் இதற்கான நிதியுதவியை வழங்கவிருக்கின்றது.

இதேவேளை, அம்பாறையில தாதிமார் பயிற்சிக் கல்லூரி ஒன்றும ஆரமபிக்கப்பட வுள்ளது. இதில சேருவதற்கென ஏற்கனவே 130 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7,9)

# விபரங்கள் திரட்டப்படும்

(பொன்னாலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் வபரங்கள் உள்ளூராட்சி ஆணையாளரினால் திரட்டப்படவுள்ளன.

இவ் விபரங்களைத் திரட்டுவதற்கான சகல நடவடிக்கைகளையும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.சபாபதிப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு -கிழக்கு மாகாணத்திலுள்ள 72 சபைகளுக்கும் மேற்படி விபரங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (7-49)

## தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி;

# எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றங்கள் எதுவுமில்லை

(கொழும்பு)

பட்டப்படிப்புகள் தொடர்பான பரீட்சைகளை நடத்த இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு அனுமதியளிக்க எடுத்துள்ள தீர்மானத்தில் மாற்றம் எதுவும் இல்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

வெளிநாட்டுப் பட்டங்களை வழங்குவதற்காக பல நிறுவனங்கள் ஏற்கனவே செயற்பட்டுவருவதாக ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் எல.எல.ரத்நாயக்கா தெரிவித்தார்.

பரீட்சை நடத்தும் பொறுப்புகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கக்கூடாதென அனைத்து பல்கலைக்கழக மாணவர் சங்க ஆணைக்குழு விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாக கேட்டபோதே உபதலைவர் இதனைத் தொிவித்தார்.

எனினும் தனியார் பல்கலைக் கழகங்களை ஆரம்பிப்பது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# நூலகர் நியமனம்

(கற்கோவளம்)

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் பொது நூலகத்திற்கு புதிய நூலகராக செல்வி செ.கெங்காதரணி என்பவர் நியமிக்கப்பட்டு கடந்த 21ஆம் திகதி தொடக்கம் பணியாற்றிவருகிறார்.

இந்நூலகத்திற்கு பலவருடங்களாக நிரப்பப்படாதிருந்த நூலகர் வெற்றிடம் தற்போதே நிரப்பபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-104)

# மின்சாரத்தில் இயங்கும் கார் சிலாபப் பொலிஸாரிடம் சிக்கியது

(சிலாபம்)

எரிபொருள் எதுவுமின்றி மினசாரத்தில் இயங்கக்கூடிய புதுவிதமான கார் ஒன்றை சிலாபத்திலுள்ள நபர் ஒருவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை இத்தகைய கார் முற்றிலும் புதுமையானதாகும்.

இந்தக் கார் இயங்குதவற்கு பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள் எதுவுமே தேவையில்லை. மின்சாரத்தைச் சேமித்து வைக்கக் கூடிய பற்றரி காருக்குள் பொருததப்பட்டுள்ளது. தேவையானபோது பற்றரியை 'ரீ-சார்ஜ்' செய்து காரில பயணம் செய்ய முடியும்.

சிலாபத்தைச் சேர்ந்த இந்நபர் இந்தியாவிலிருந்து மேற்படி காரை சட்டபூர்வமான முறையிலேயே இறக்குமதி செய்துள்ளார்.

ஆனால் இந்தக் காரை அவர் மோட்டார் பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்யவில்லை. இதன் காரணமாகவே கார் பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தோப்புவ பொலிஸ் சோதனைச் சாவடியைக் கடந்து செல்ல முற்பட்ட இக்காரை சிலாபம பொலிஸார் கைபபற்றியதுடன் வாகனத்தின் உரிமையாளரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நான்குபேர் பயணம் செய்யக் கூடிய இக்காரை ஆறு மணித்தியாலங்களுக்கு 'சார்ஜ்' செய்தால் சுமார் 80 கிலோமீற்றர் தூரத்திற்குப் பயணம் செய்ய முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் மின் ஒளி விளக்குகள் பாவிக்கப்படுவதால 60 கிலோ மீற்றர் தூரத்திற்கே பயணிக்க முடியுமெனவும் தாம கைப்பற்றிய கார் நீதிமனறத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்றம் அனுமதிக்கும் பட்சத்தில் இக்காரை மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தில் பதிவுசெய்த பின்னர் அதன் உரிமையாளர் பயன்படுத்த முடியுமெனவும் சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். (7-9)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

திறன் அபிவிருத்தி தொழில்கள், தொழில்நுட்பக் கல்வி அமைசசின் கீழ் தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றிலுள்ள 'பயிற்சி உதவியாளர்' பதவிகளுக்காக 18-45 வயதிற்கு இடைப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விசார் ஏழு பதவிகளும், ஏனைய துறைசார் பதினொரு பதவிகளுமாக மொத்தம் 18 பதவிகளிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர் நாயகம் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த.பெ.எண் 557, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

மேலதிக விபரங்களை இம் மாதம் 20ஆம் திகதிய தினகரன பத்திரிகையில் பார்வையிடலாம். (7-21)

# இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

(ஊர்காவற்றுறை)

வேலணையில் இயங்கி வந்த இலங்கை வங்கி ஊர்காவற்றுறை கிளையின் நடமாடும் சேவை கடந்த 23ஆம் திகதி புதன்கிழமை தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கி ஊர்காவற்றுறை கிளையின் முகாமையாளர் இ.விஜயரட்னம் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில், இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம், மாவட்ட முகாமையாளர் சி.நடராசலிங்கம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபா பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் கே.மகேந்திரலிங்கம், பிரதம எழுதுநா க.ஜெகபாலன், ஊர்காவறறுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் வர்த்தகர்கள் - வாடிக்கையாளர்கள் - ஓய்வூதியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி நடமாடும் சேவை ஒவ்வொரு புதன்கிழமைகளிலும ஓய்வூதியக் கொடுப்பனவு தினங்களிலும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடததக்கது. (7)

# நடேசனுக்கு வானூர்தி வழங்க பாதுகாப்புப் படையினர் மறுப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய பயணத்தை முடித்துக்கொண்டு வன்னி திரும்பும் தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளருக்கு வன்னிக்கு செல்வதற்கான உலங்கு வானூர்தியை வழங்கப்போவதில்லையென பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்ட குழு தொடாபாக இராணுவத்துக்கு வழங்கப்படட பெயர்ப்பட்டியலில் நடேசனின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டே அவருக்கு வானூர்தி வசதி வழங்கப் படையினர் மறுப்புத தெரிவித்தனர்.

யுத்தநிறுத்த உடனபாட்டில் விடுதலைப்புலிகளின் இராணுவ தரப்பினருக்கும், அரசியல் தலைவர்களுக்குமே உலங்கு வானூர்தி வசதிகள் வழங்கப்படும் என்ற விதிமுறையுள்ளதாகவும் பாதுகாபபுத் தரப்பினர் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளில் ஒருவரான தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நேற்றுமுன்தினம் தாயகம் திருப்பினார்.

விமானம் மூலம் கொழும்பு வந்த அவர், தரைவழியாகவே கிளிநொச்சி வந்தடைந்தார். (7-9)

# பயணிகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

ஓமநதை சோதனைச் சாவடியூடாகப் பயணத்தினை மேற்கொள்வோர் அண்மை நாட்களாகப் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

சோதனைச் சாவடியூடாகப் பயணப்போா தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக நீண்டநேரம் காத்துநிற்க வேண்டிய நிலை தற்போது நீடிக்கின்றது.

இப்பணிகளில் ஈடுபடும் படையினர் தற்போது அலட்சியத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் வைத்தியாசலைகளுக்குச் செல்லும் நோயாளர்களும், குழந்தைகளுடன் செல்லும் பெண்களும் மற்றும் முதியவர்களும், நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வோரும் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். (க)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக், ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதானவிலையில் பெற்றுக்கொள்ள

### நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226

# மக்கள் சமூகம் எழுச்சி கொள்வதன்மூலம் தாயக விடுதலை உருவாகும்- இசைச்செல்வன்

(புங்குடுதீவு)

தமிழர்களின் போராட்ட பலத்தினையும் அரசியல் பலத்தையும் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு நிரூபித்து மக்கள் சமூகம் எழுச்சி கொள்வதன் மூலமே தாயக விடுதலை உதயமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தீவகக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வீ.இசைச்செல்வன்.

தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

எமது தாயக விடுதலைப் போராட்டமானது இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வலுவான ஓர் பலத்துடன் எமது தேசியத் தலைவரின் வழி நடத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினாலும் தமது உயிர்களைக் கூட துச்சமென மதித்து தாயக விடுதலைக்காய் தம் உயிர்களை தியாகம்செய்த மாவீரர்களாலும் இன்று எமது தமிழினம் தலை நிமிர்ந்து வாழுகின்றது.

எமது மக்களின் அரசியல் பலமும் சென்றவருடம் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எமது மக்கள் சமூகம் எழுச்சி கொள்வதன் மூலம் தாயக விடுதலை உதயமாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு பலத்தினையும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பலவீனமாகக் கருதுமாக இருந்தால் இது அவர்களின் பலவீனமாகவே கருதவேண்டும்.

இன்று எமது விடுதலைப் போராடடத்தினுடைய உண்மையினை சர்வதேசம் அறிந்து சர்வதேச நாடுகள்கூட எமது தாயகப் பிரதேசங்களுக்குவந்து கொண்டு இருக்கிறார்கள்.

அண்மையில ஏற்பட்ட இயற்கை அன்னையின் சீற்றத்தினால் எமது தாயகப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகி மூன்று மாதங்கள் ஆகிய நிலையிலும் எமது மக்களுக்கு ஏதாவது உதவிகள் வழங்கப்பட்டு அவர்களின் வாழக்கைத் தரத்தில் அரசு அக்கறைகொண்டு செயற்படுகின்றதா? என சிந்திப்போமாக இருந்தால் ஒன்றுமே நடந்ததாக இல்லை.

ஆனால் தென்னிலங்கையில் ஏற்பட்ட அழிவுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஸ்ரீலங்கா அரசாங்கமானது எமது தமிழ் மக்களை புறந்தள்ளுகின்ற செயற்பாடுகளினையே காணக்கூடியதாகவுள்ளது.

தெற்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து இருக்கும் ஜே.வி.பி., ஜாதிகஹெல உறுமய போன்ற அரசியல் கட்சிகள் எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மையினை உணராது விடதலைப் புலிகளின் பலத்தினை பலவீனமாக கருதி இந்தியாவின் உதவியுடன் விடுதலைப்புலிகளினை அழிப்பதாக கங்கனம்கட்டி நிற்கின்றது.

இந்தியா உலகின் நான்காவது வல்லரசாக திகழ்கின்றமை அனைவரும் அறிந்தமையே இவ்வாறு நான்வது வல்லரசான இந்தியா எமது தாயக மண்ணிலுள்ள விடுதலைப்புலிகளை அழிக்க 1987ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின கோரிக்கையை ஏற்று அப்போதைய இந்திய பாதுகாப்பு அமைச்சின் கட்டளைக்கு அமைய எமது தமிழீழ பிரதேசங்களில் காலடி எடுத்து வைத்தது.

அன்று எமது தமிழ் தேசியத்தின் பலத்தினாலும் விடுதலைப் புலிகளின் பலத்தினாலும் ஒன்றுதிரண்டு உலகின் நான்காவது வல்லரசான இந்தியாவை தமிழீழ பிரதேசங்களில் இருந்து தமிழகம் நோக்கி விரட்டியடிக்கப்பட்டது.

இவ்வாறான நிலைமை சர்வதேசங்களின் உதவியினால் தெற்கில் ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகள் மூலம் மீண்டும் உருவாக்கப்படுமாக இருந்தால் எமது தமிழ் தேசியமும் விடுதலைப்புலிகளும் இணைந்து பொறுமையின் எல்லையில் இருந்து விடுபட்டு அதனை எதிர்கொள்வு தறகும் தாயாரகவே இருக்கின்றது என்றார். (க-126)

# ஆய்வுகூட பணியாளர்களை கடமைக்கு திரும்புமாறு பணிப்பு

(கொழும்பு)

மருத்துவ ஆய்வுகூடப் பணியாளர்கள் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தம் பிற்போடப்பட்டுள்ளது.

இதனையடுத்து தமது உறுப்பினர்களை உடனடியாக வேலைகளுக்குத் திரும்புமாறு மருத்துவ ஆய்வு கூடப் பரிசோதகர் சங்கம் கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் விடுக்கப்பட்ட சுனாமி முன்னெச்சரிக்கையும், அதைத் தொடர்ந்து மக்களின் பதட்டநிலை, மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாகவே இந்த வேலை நிறுத்தத்தைப் பிற்போட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கத்தின் உறுதிமொழியை அடுத்து பெற்றோழிய மற்றும் மின்சார சபை ஊழியர்களும் தமது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க7)

# குழந்தை பராய விருத்திமூலம் ஆரோக்கிய சந்ததி உருவாகும்

(சுதுமலை)

ஆரம்ப குழந்தைப்பராய விருத்தி மூலம் ஆரோக்கியமான எதிர்காலச் சந்ததிகளை உருவாக்க முடியும் என்று வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேல்பிள்ளை தெரிவித்திருக்கிறார்.

பண்டத்தரிப்பில் உள்ள பிரான்பறறு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தின் திறப்புவிழா அண்மையில் மாதர் சங்க தலைவி திருமதி.பத்மா தலைமயில் நடைபெறறபோதே மாகாணப்பணிப்பாளர் இதனைத் தொவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இன்று வைத்தியசாலை வசதிகள் இல்லாத மிகவும் பின்தங்கிய. கிராமங்கள் இனம் காணப்பட்டு இவ்வாறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அநதவகையில் பிரான்பற்று பகுதி தற்போது மீளக்குடிமாந்து அதிகளவு சனத்தொகையை கொண்ட பகுதியில் உள்ளது. எனவே மக்கள் தாய்/சேய் நலசிகிச்சைகளுக்காக குழந்தைகளுடன் அதிகளவு தூரம் செல்வதைத் தடுப்பதற்காகவே யுனிசெவ் நிறுவனம இவ்வாறான பல வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. எனவும், இந்த சிகிச்சை நிலையத்தில் எதிர்காலத்தில் ஒரு குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பூரணமாக தங்கியிருந்து பணிபுரிவார் எனவும் தெரிவித்தார்.

எனவே மக்களின் அவசிய தேவைகளிற்கு இந்நிலையம் மிகவும் பயனுள்ளதாக அமையும என வும் மாகாண சுகாதாரப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது இந்தப் பகுதிகளில சிறுவர்களின் போசாக்கு நிலை மிக குறைவாகவே உள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு கிராமப்பகுதிகளுக்கு போசாக்குணவு விநியோகிக்கும் செயற்பாடுகள், மற்றும் சிறுவர்களுக்கான தடுப்புமருந்து வழங்கும் நிகழ்வுகள், கும்பத்திட்ட சிகிச்சை வசதிகள், முதியோர் சிகிச்சை போன்றன இந்த நிலையத்தில் மேற்கொள்வது தொடர்பாகவும் ஆவன செயயப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மானிப்பாய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரிகள், சுகாதார பரிசோதகாகள், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், சமயப் பெரியார்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் பாடசாலைகளின் அதிபர்கள், உள்ளூராட்சி மன்ற செயளாளர், உபஅலுவகப் பிரதிநிதிகள், யுனிசெவ் நிறுவன உயா அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினா். (7-252)

# இலங்கையில் கட்டுமீறி செல்லும் வீதி விபத்துக்கள்

(கொழும்பு)

இலங்கையில் வீதிப் போக்குவரத்துத் தொடர்பான விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்புக் காணப்படுவதாக பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

சராசரியாக ஒவ்வொரு நான்கு மணித்தியாலயத்திற்கும் ஒருவர் விபத்தின் காரணமாக மரணிக்கிறார் என பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா வாகிஸ்ர தெரிவித்திருக்கிறார்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான விதிமுறைகளைக் கட்டுபபடுத்துமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

இதற்கமைய நடாளாவிய ரீதியில விஷேட போக்குவரத்து செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவும் அறிவித்திருக்கிறது. பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் திடீர் சோதனைகள் நடாத்தப்படும்.

குறிப்பாக உல்லாசப் பயணங்களுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் பற்றி கூடுதல் கவனம்செலுத்தப் படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-7)

## வவுனியாவில் பதற்றம்

வவுனியாவில் உள்ள முக்கிய இராணுவ முகாம்கள் திடீரென பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் வவுனியாவில் உள்ள மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அண்மை நாட்களாக வவுனியாவில் அனைத்து இராணுவ தளங்களையும் இராணுவம் பலப்படுத்தி வருவதுடன் முகாமுக்கு பாதுகாப்பாக மண் காப்பரண்களை மிக உயரமாக அமைத்து பாதுகாப்பு நடவடிககையில் ஈடுபட்டுவருகின்றனர்.

நகரில் உள்ள யோசப் முகாம், புனாவையில் உள்ள விமானப்படை முகாம், ஓமந்தை இராணுவ முகாம ஆகிய முகாம்கள் தொடர்ந்து பலப்படுத்தப்பட்டு வருகின்றன. (க)

# திருமலை, மட்டிக்களி கடல் வற்றிக்கொண்டு செல்கிறது

## சுனாமி ஏற்படும் என மக்கள் பீதி

திருகோணமலையில் உவர் மலை கீழ்க்கரை வீதியில் மட்டிக்களி கடல் வற்றிக்கொண்டு செல்வதாகவும், மீண்டும் நீர் பழைய நிலைக்கு வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமை மக்கள் மத்தியல் அச்சத்தைத் தோற்றுவித்திருக்கின்றது. கடந்த மார்கழி மாதம சுனாமி ஏற்பட்டபோது இக் கடல் நீர் மட்டம் உயர்ந்ததன் காரணமாக மட்டிக்களி பிரதேசம், லிங்க நகர் பிரதேசம் என்பன கடுமையாகப பாதிக்கப்பட்டன.

அத்துடன் கிண்ணியாவில் சின்னக்கிண்ணியா பிரதேசத்தில் இருந்த மக்கள் முழுமையாக வெளியேறியுள்ளனர். இவர்கள் பெரிய கிண்ணியா மற்றும் முள்ளிப் பொததானை, கந்தளாய் பகுதிகளை நோக்கி சென்று கொண்டிருக்கின்றார்கள்.

திருக்கோணமலை நகரத்தில் கடலை அண்டிய பகுதியைச் சேர்ந்த மக்கள் பத்தாம் குறிச்சி, வீரநகர், திருக்கடலூர், பள்ளத்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் செல்வநாயகபுரம், உவர்மலை பகுதிகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

பொலிஸ் நிலையம், பன்சாலை என்பன மக்களால் நிரம்பிக் காணப்படுகின்றது. பெருமளவிலான மக்கள் உவர்மலைப் பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளனா். விவேகானந்தா கல்லூரி திறந்து விடப்பட்டுள்ளது. செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்திலும் மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். பெருமளவிலான மக்கள் வீதிகளில் அலைந்து திரிகின்றனர். குழந்தைகளின் அழு குரல்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றது.

பொலிஸார் முக்கிய இடங்களில பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டுள்ளனா. உள்துறைமுக வீதி மக்கள் கூட்டத்தினரால் நிரம்பியுள்ளது. புதினம் பாாப்பதற்காக பெருமளவிலான இளைஞர்கள் கூடியிருப்பதால், வீதியில் செல்லும் மக்களுக்கு பெருத்த இடைஞ்சலாக இருக்கின்றது. பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக இது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலை பேசி தொடர்புகளும் பூரணமானதாக இருக்கவில்லை. இடையிடையே தடங்கல் ஏற்பட்டு வருகிறது. (க)

# "சுனாமி" இலங்கைக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தாதாம்

நிலநடுக்கங்கள் இரு தடவை அடுத்தடுத்து நிகழ்ந்துள்ளதாகவும், இம்முறை இதன் மொத்தத் தாக்கம் 8.7 ரிக்டராக கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெற்காசிய வானிலை மையம் அறிவித்துள்ளது.

ஆழிப்பேரலை அபாயம் தொடர்ந்தும் இருந்தாலும், இந்தத் தடவை, நிலநடுக்கத்தால் உண்டான பேரலையின் வேகம், தெற்குப் பகுதியாகவே அதிகம் சென்றுள்ளதால், மொறிசியஸ் தீவுகளை உள்ளடக்கிய பகுதிகளிலுள்ள பிரதேசங்களுக்கே அதிக ஆபத்து உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட சிறிது நேரத்தில் இந்தோனேசியாவின் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட உடனடித் தாக்கத்தால், அங்குள்ள நியாஸ் என்னும் தீவுப் பகுதியில் குறைந்தது 50 பேராவது இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மக்கள் இந்தோனேசியாவில் தொடர்ந்தும் உயர்ந்த பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். இலங்கையிலும் தொடர்ச்சியாக மக்களை பாதுகாப்பான பிரதேசங்களுக்கு கொண்டுசெல்லும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

கடலடி நில நடுக்கத்தின் தரவுகளின்படி இலங்கைத்தீவின் தென்கிழக்கு தென் கரையோரங்களை சிறிய அளவில் தாக்கலாம். நில நடுக்கத்தின் அளவு ஆரம்பத்தில் 8.2றிக்டர் ஆக அறிவிக்கப்பட்டு பின்னர் 8.5றிக்டர் ஆக உயர்த்தப்பட்டு தற்பொழுது 8.7றிக்டர் மீள ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து நில நடுக்கம் இடம் பெறுமாயின் அது தமிழ் ஈழ கரையோரங்களைவிட மாலை தீவு மற்றும் மொறிசியஸ் தீவை தாக்குவதற்கான சாத்தியங்கள் அதிகமாக தென்படுகிறது. மொறிசியஸ் தீவையும் ஆபிரிக்கா கண்டத்தின் கிழக்கு கரையோரங்களை பேரலை சென்றடைய 5-6 மணித்தியாலங்கள் செல்லலாம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

கடந்த 26-ஆம் திகதி மார்கழி மாதம் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சமநிலை பாதிக்கப்பட்டு சுமத திரா தீவுப்பகுதிகளில தொடர்ச்சியாக சிறிய அளவில் நடுக்கம் நடந்த வண்ணம் தான் உள்ளன. 28ஆம திகதி பங்குனி மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம் சமநிலையை மேலும் பாதித்துள்ளதா அல்லது சமநிலை மீள அடைய உதவியுள்ளதா என எதிர்வரும் நாட்களில் ஆராயப்படும் இதன் அடிப்படையில் மேலும் எதிாகாலங்களில் புதிய பாரிய நிலநடுக்கங்களை அதிகரித்த அளவில் எதிர்பார்க்கலாமா இல்லையா என அனுமானிக்க முடியும். (க)

# அரசியல் உலகையே ஆட்டிப்படைத்த பெண் உளவாளிகள்

பெண்களினால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பது பழமொழி அதனால் பெண் உளவாளிகளின் வருகை உளவுத் துறைக்குள் வேகமாக அதிகரித்து வருகின்றது. பாலியல் நடவடிக்கைகளை பலம் பொருந்திய ஆயுதமாக பயன்படுத்தி உளவுத் தொழிலில் ஈடுபடும் பெண் உளவாளிகளினால் ஒரு தேசத்தின் தலைவிதியையே மாற்றி அமைக்க முடிகின்றது.

உளவுத்தொழிலில் பெண்கள் மிகவும் திறமையாக பணியாற்றுகின்றார்கள் என புலனாய்வு துறையைச் சேர்ந்த நிபுணர்கள் கூறுகின்றார்கள். உடல் கவர்சியினாலும், கூந்தல் அழகினாலும் அதிகாரிகளையும் தலைவர்களையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் உடையவர்களாக பெண் உளவாளிகள் விளங்குகின்றனர்.

கவர்ச்சியாகத் தோன்றும் பெண் உளவாளிகள் அழகு மிடுக்கினால் காதலியாகவோ வேறுவகையிலோ ஆண்களை வசப்படுத்தும் வல்லமை உடையவர்களாக மாறுகின்றாள். உளவுத் தொழிலில் பாலியல் செயற் பாடுகள் இன்று மலிந்து விட்டன. அந்த வகையில் இலங்கையில் பாலியல் ஆயுதத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. தமிழ் இளைஞர்களை சிங்கள புலனாய்வாளர்கள் தமது வலையில் வீழ்த்துவதற்கு பாலியல் சதிகளை விலை மாதர் ஊடாக இலவசமாக ஏற்பாடு செய்து கொடுக்கின்றனர்.

தமிழ் இளைஞர்களை புலனாய்வுத் தேவைக்கு உள்வாங்கும் நோக்குடன் பாலியல் தொழிற்பாட்டு நிலையம் ஒன்றை அனுராதபுரத்தில் அமைத்திருப்பதாக கூறப்படுகின்றது. தமிழ் மொழியில் தேர்ச்சிபெற்ற சிங்கள பெண் உளவாளிகளையும் சோரம் போன

## தலைவர்களை வீழ்த்திய அழகிகள்

தமிழ் பெண்களையும் சிங்கள புலனாய்வுத்துறை பாலியல் உளவுச் செயற்பாட்டிற்கு பயன்படுத்துகின்றது.

அரசியல் பணிக்கென இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசம் செல்லும் அரசியல் போராளிகளையும் சிங்களப் பெண் பாலியல் உளவாளிகள் தமது வலையில் வீழ்த்த முயலலாம் அரசுடன் ஒட்டுப் படையாக இயங்குவோருக்கு பாலியல் செயற்பாட்டிற்கு பூரண வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது. கவர்சிகரமான பெண் உளவாளிகள் மூலம் அவர்களை தொடர்ந்து வசப்படுத்தியும் வருகின்றதை சிங்கள உளவுத்துறையும் அண்மைக்கால நடவடிக்கையில் இருந்து அறிய முடிகின்றது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குமாரிகுரே விடயமும் ஒரு புலனாய்வு ஊடுருவல் பாலியல் செயற்பாடு என்று கூற முடியும். இரண்டாம் உலக யுத்தத்தின் பாதையினையும் மாற்றியதில் சிந்தியா என்னும் பெயர் கொண்ட பெண்ணின் பங்களிப்பு கனிசமானது. சிந்தியாவின் அழகினாலும் கவர்ச்சியினாலும் ஆண்கள் அவளிடம் இலகுவில் அடிமையானார்கள். சிந்தியாவின் முதல் புலனாய்வுக் களம் போலந்து நாட்டு வெளிவிவகார அமைச்சில் வேலைபார்க்கும் உயர் அதிகாரியை தனது வலையில் வீழ்த்துவதாக இருந்தது. சிந்தியாவின் அழகுக் கோலத்தை எதிர்க்க முடியாது போன போலந்து அதிகாரி அந்த அழகிய மங்கையுடன் நெருக்கமானார்.

இருவருக்கும் ஏற்பட்ட பாலியல் பிணைப்பால் போலந்து இரும்பு அறையில் இருந்த இரகசியங்கள் எல்லாம் கட்டிலுக்கு வந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கையே மாற்றிய உலகப்பிரசித்திபெற்ற இடமே அந்தக்கட்டில்தான்.

1941ஆம் ஆண்டு பிரான்ஸ், இத்தாலி தூதரகங்களினுள் ஊடுருவக்கூடிய ஒருவர்

## பாலியலைப் பயன்படுத்தி அரசியல்

தேவைப்பட்டது. அதன் பிரகாரம் சிந்தியா தெரிவு செய்ப்பட்டு வோசிங்டன் நகருக்கு அனுப்பப்பட்டாள் அங்கு அவள் மதுபான விருந்துகளில் பங்கு கொண்டு ஆடினாள் அதனூடாக இத்தாலி நாட்டு அதிபர் முசோலினியின் கடற்படை உதவியாளரான 'லைஸ்' என்பவரை தனது காதல் வலையில் சிக்க வைத்தாள். 'லைஸ்' தலைகால் தெரியாமல் சிந்தியாவின் மேல் காதல்கொண்டார் காமலீலைகளின் ருசியால் சிந்தியாவுக்கு முகவரானார். இந்த இரண்டாவது கட்டிலில் இத்தாலிய இரும்பறையில் பூட்டிவைத்திருந்த இரகசியங்கள் அம்பலமாகின.

சிந்தியா தனது நோக்கம் நிறைவேறியதும் காதலன் லைசை கைகழுவி விட்டு மாயமாக மறைந்தாள் இறுதியில் லைசின் பலவீனமும் துரோகத்தனமும் தெரிய வந்ததினால் அவர் துரோகி என்ற பட்டத்துடன் பதவி இழந்து வீடு சென்றார்.

சிந்தியாவின் அடுத்த இலக்கு பிரான்ஸ் தூதரகமாக இருந்தது. தூதரின் பத்திரிகைத் தொடர்பாளரான பிரேசலுடன் ஊடுருவி காதல் கொடர்பை ஏற்படுத்திக் கொண்டாள் பிரேசலும் சிந்தியாவை தனது மூன்றாவது மனைவியின் வீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கு தங்குவதற்கு ஒரு அறையினை ஒதுக்கினார். இருவரும் காமலீலைகளில் ஈடுபடுவதற்கு தூதரகத்தில் தங்கினார்கள்.

காவலாளியும் அவர்களின் காமலீலைகளுக்கு இடம் கொடுத்தான். காவலாளி இடம் அளித்ததற்கு உதவியாக சிந்தியா வழமையாக பணமும் மதுவும் கொடுத்து வந்தாள். உளவு வேலைகளில் ஈடுபடும் நாட்களில் காவலாளிக்கு வழங்கும் மதுவில் மயக்க மருந்தினையும் கலந்து கொடுப்பாள் காவலாளி மயங்கிவிட சிந்தியாவும் பிரேசினுடன் காமத் திருவிளையாடல்களில் ஈடுபட பிரித்தானிய உளவாளிகள் தூதரகத்தின் பாதுகாப்பு அறைக்குள் புகுந்து சாமர்த்தியமாக பூட்டுக்களை உடைத்து அங்கிருக்கும் இரகசியத் தகவல்களை நகலெடுத்துக்கொண்டு அதே சாமர்த்தியத்துடன் பூட்டுக்களில் தடையம் ஏதும் தெரியாமல் பூட்டி விடுவார்கள்.

சிந்தியா இருந்திரா விட்டால் பிரான்சையும் நேச நாடுகளையும் பிரித்தானியா வெற்றி கொள்வது கடினமென அதன் பாதுகாப்பு அதிகாரிகளே ஒப்புக்கொண்டனர். சிறிது காலத்தின் பின் 'உடலைவிற்று உளவு வேலையில் ஈடுபடுவது பற்றி வெட்கப்படவில்லையா?' என சிந்தியாவிடம் ஒரு பத்திரிகையாளர்கேட்டபோது அவளின் பதில் 'எனது பாலியல் செயற்பாட்டால் ஆயிரக்கணக்கான பிரித்தானிய, அமெரிக்க உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் எனது நாடும் வெற்றிவாகை சூடியதாய் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்' என்பதுதான்.

சிந்தியாவைப்போல் இன்னுமொரு பெண் பாலியல் உளவாளிரெனியா. இவள் கிழக்கு ஜேர்மனியில் இரகசிய சேவையில் பயிற்சி பெற்றாள் கியூபாவின் புரட்சித் தலைவர்களான கஸ்ரோவினையும் சேகுவேராவினையும் கண்காணிப்பதற்கும் அவர்களின் திட்டங்கள் பற்றி அறிவதற்கும் எம்.எவ்.எஸ் என்ற ஜேர்மன் உளவு நிறுவனத்தாலும் கெ.ஜி.பி என்ற ரஸ்ய உளவு நிறுவனத்தாலும் ரெனியா பணிக்கு அமர்த் தப்பட்டு இருந்தாள். ரெனியா தனது புலனாய்வுப்பணியை ஆரம்பிக்க படாதபாடுபட்டு சேகுவேராவுடன் காதல் கொண்டு அவனுக்கும் வேலை செய்தாள் ஒரே நேரத்தில் மூன்று நாடுகளுக்கு மூன்று பக்க முகவராக வேலை செய்தாள். நடன நிகழ்வுகளில் ஆர்வம் இருந்ததினால் கலாசார பிரதிநிதியாகவும் பின்னர் கியூபாவில் கல்வி அமைச்சின் முக்கிய ஒரு அதிகாரியாகவும் பின்னர் பகுதிநேர பெண்கள் இராணுவ அமைப்பின் அதிகாரியாகவும் சேகுவேரா ரெனியாவை நியமித்தார்.

பொலிவியா நாட்டின் புரட்சிக்கான திட்டத்தை சேகுவேரா உருவாக்கியபோது உளவு வேலை பார்ப்பதற்கு பொறுப்பாளராக ரெனியா நியமிக்கப்பட்டாள் அவளின் காமலீலைகளில் சேகுவேரா மீள முடியாது இருந்து போனதால் சேகுவேராவை ஆட்டிப்படைக்கும் அளவுக்கு உருவெடுத்தாள் ரெனியா என்ற அந்தப் பாலியல் உளவாளி. சேகுவேரா அமைப்புக்குள் சாதுரியமாக ஊடுருவி இருந்த ரெனியா தனது உண்மையான எஜமா னர்களுக்கு அதன் திட்டங்களையும் நடவடிக்கைகள் பற்றி எல்லாம் தெரியப்படுத்திக் கொண்டிருந்தாள்.

1966ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி சேகுவேரா புரட்சிக்கான நாளை குறித்திருந்தார் ஆனால் பத்து நாட்களுக்கு முன் பொலிவியப்படைகள் சேகுவேராவின் படைகளை தாக்கி அழிக்கத் தொடங்கி விட்டன. ரெனியாவால் அனுப்பப்பட்ட புலனாய்வுத் தகவலே இத் திடீர் தாக்குதலுக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

செகுவேராவின் மரணத்திற்கும் ரெனியாதான் காரணம் என ஏகாதிபத்திய நாடுகள் கூறுகின்றன ஆனால் நேசநாடுகள் அவள் ஒரு தேசபக்தை என சுட்டிக் காட்டியுள்ளனர்.

ரெனியா என்ற பாலியல் உளவாளியின் வலையில் சேகுவேரா சிக்குண்டதால் பொலிவியாவினதும், கியூபாவினதும் தலைவிதியே மாற்றி எழுதப்பட்டது. உலகின் முதலாவது பாலியல் உளவாளியென வர்ணிக்கப்பட்டவள் மாற்றாக்ஹரி. இவள் ஜேர்மனிக்காக உளவு வேலை செய்தால் அவளிடம் இருந்த மிகவும் பலம் பொருந்திய ஆயுதம் தன்னிகரில்லா பாலியல் செயற்பாடும் உடல் அழகுமாகும் அதன் மூலம் தனது உளவு வேலையை இலகுவாக்கினாள்.

யாவா நாட்டில் ஹவாய் நாட்டு நடனத்தை கற்றபின்னர் பாரிஸ் நகரத்தில் மதுபான சாலைகளில் நாட்டியக்காறி ஆனால் அங்கு அவள் இராணுவத் தளபதிகளையும் அரசியல்வாதிகளையும் முழு இரவும் தனது நடனத்தால் மகிழ்வித்து கட்டில் வரை இழுத்துச்சென்று உத்தியோகபூர்வமான இரகசியத் தகவல்களை கறந்து அவற்றை ஜேர்மனிக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள்.

இவள் பிரான்சின் உளவுத் துறையினரால் இனம் காணப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டாள். புலனாய்வு உலகின் வெற்றிகரமான ஊடுருவல்களை கவர்ச்சி கரமான பாலியல் உளவாளிகள் மூலம் சாதிக்க முடிகின்றது. உளவாளி பெண்களின் காதல் மொழிக்கும் காமலீலைகளுக்கும் வரலாற்றில் அடிமையானவர்களை எண்ணி கணக்கிட முடியாது. பெண் பாலியல் உளவாளிகளின் பாலியல் செயற்பாட்டால் முடிதுறந்தவர்கள் பலர். பதவி இழந்தவர்கள் பலர் துரோகி என்ற பட்டம் பெற்று தூக்கு மேடைக்கு சென்ற ஆண்கள் பலர் என்பது வரலாற்றுப்பாடமாகும். ✳

நன்றி : இணையத்தளம்

# ஆபாச பிரசுரங்களை தடுக்க பொலிஸாருக்கு அதிகார முண்டு

டாக்டர் டட்லிப் பெரேரா

(கொழும்பு)

ஆபாசப் பிரசுரங்களை வெளியிடுவதைத் தடை செய்வதற்கான அரச மட்டத்திலான திட்டத்தின் அவசியம் பற்றி கொழும்பு இராணுவ வைத்தியசாலை மருத்துவ ஆலோசர் டாக்டர். டட்லி பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய பிரசுரங்களை தடை செயவதற்கு பொலிஸாருக்கு அதிகாரம இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

தேசிய பாலியல் நடவடிக்கைகள் மூலம் பரவும் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புத் திட்டத்தைச் சேர்ந்த விசேட மருத்துவர் டாக்டர் குலசிறி புத்திகொரல இத்தகைய வெளியீடுகள் மூலம் இளைஞர்கள் பல்வேறுபட்ட துஷ்பிரயோககங்களில் ஈடுபடுவதற்கு தூண்டப்படுகின்றனர் என்று தெரிவித்தார். (7)

# பத்து ஆயிரம் பசுக்களை விவசாய அமைச்சு வழங்கும்

(கொழும்பு)

பண்ணை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கமத் தொழிலாளர்களின் நன்மை கருதி 10 ஆயிரம் பால் தரும் பசுக்களை விநியோகிக்க விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

பால் உற்பத்திப் பொருட்களையும், பால்மாவையும் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலைகளை நிறுவுவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸ நாயக்க மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் க்ால்நடை ஆயவு பணியகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

பால்மாவை இறக்குமதி செய்வதற்காக பெருந்தொகைப் பணத்தை அரசாங்கம் செலவிடுகிறது.

இதற்காக ஏற்படும் செலவைக் குறைந்து உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.(7-9)

## இன்று ஒரு தகவல்

# கவிதையில் தெரியும் காட்சி

நாம் யார்? எம்மிடையே உள்ள தகுதி என்ன? இப்படியான எண்ணம் எப்போதும் எம்மிடம் இருக்கவேண்டும்.

தகுதிக்கு மீறிய எண்ணங்களே பல சமயங்களில் எம்மை சிக்கல்களில் கொண்டுபோய் விட்டுவிடும்.

ஒரு பூனை இருந்தது. அது தன்னை ஒரு புலி என்று நினைத்துக் கொண்டிருந்தது. தன்னைப்பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்புடன் அந்தப் பூனை நடந்து போய்க் கொண்டிருந்தது.

அப்போது வழியிலே ஒரு பெரிய யானை அமைதியாக நின்று கொண்டிருந்தது.

அந்த யானை பொறுமையாக நின்று கொண்டிருந்ததால், இந்தப் பூனைக்கு அதனிடம் சென்று கொஞ்சம் வாலாட்டிப் பார்க்கலாம் என்று ஒரு ஆசை ஏற்பட்டது.

உலக இயல்புதானே இது. இந்தப் பூனை ரொம்ப நல்ல பிள்ளை மாதிரி அந்த யானை இருக்கும் பக்கமாகச் சென்றது. அதைச் சுற்றிச் சுற்றி வந்தது. உற்றுப் பார்த்தது. வால் துறுதுறுத்தது. வம்பு வளர்க்க ஆரம்பித்தது. அந்த யானையிடம் போய்

"எல்லோருக்கும் ஒரு பக்கம்தான் வால் இருக் கும். ஆனால் உனக்கு என்ன இப்படி இரண்டு வாலிருக்கிறதே" என்றது. வேண்டாத வேலைதானே இது. இருந்தாலும் அந்த யானை பொறுமையாகப் பதில் சொனனது.

"அப்படியல்ல! பின்பக்கம் இருப்பதுதான் வால் முன் பக்கம் இருப்பது தும்பிக்கை" என்றது. அத்தோடு விட்டு விட வேண்டியதுதானே. விடவில்லை இந்தப் பூனை.

அது சரி! தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையாக இருக்கிறது. அது எதற்காக? என்றது. அதற்கும் அந்த யானை பொறுமையாகப் பதில் சொன்னது "ஓ அதைக் கேட்கிறாயா? ஊற்றிலே நீர் இருக்கும் அல்லவா? அதை உறிஞ்சிக் குடிப்பதற்காகத்தான் அப்படி இருக்கிறது. என்றது.

"சரி எல்லோருக்கும் பல் வாயினுள்தானே இருக்கும் உனகது என்ன வெளியிலே இருக்கிறது. அத்துடன் இவ்வளவு பெரியதாக நீளமாக இருக்கிறது" என்று கேட்டது பூனை.

"அதுவா ஒரு புலி என்னிடம் வந்து வாலாட்டுகிறது என்று வைத்துக்கொள் அந்த நேரத்தில் அதைத் தாக்குவதற்காகத் தான இது இப்படி இருக்கிறது. என்றது.

இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தது. மலை எங்காவது பாய்வதுண்டா? நீயோ கறுப்பா இருக்கிற மலை உன்னால் எப்படிப் பாய முடியும்? அது முடியாத காரியம்!' என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தது.

என உடம்மைப் பார்த்து விட்டுத்தானே மலை என்கிறாய் நான் பாய வேண்டிய அவசியமே இல்லை இப்போ உன்னைப்பாய வைகிறேன் பாா என்று சொல்லி விட்டு அந்தப் பூனையை தும்பிக்கையாலே அலட்சிமாக தூக்கி எறிந்தது. யானை.

எங்கேயோ போய் விழுந்த அந்தப் பூனை. அப்பாடா என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்து நின்று பார்த்தது.

தூரத்திலே அந்த யானை அப்போதும் பொறுமையாக ஆனால் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. இப்போது தான் அந்த யானைக்கு ஞனோதயம் ஏற்பட்டது.

யானை பாய் வேண்டிய அவசியமேயில்லை அதற்கு நீளமான தும்பிக்கை இறக்கிறது என்பதைப் புரிந்து கொண்டது.

வலியாரிடம் வாயாடக் கூடாது என்ற பாடத்தை பூனை கற்றுக்கொண்டது. இக்காட்சி பாவேந்தர் பாரதிதாசன் கை வண்ணத்திலே ஒரு கவிதையாக உறப்பெற்றது.

இரண்டு பக்கமும் வாலா என்றது பூனை எதிரிலே தும்பிக்கை என்றது யானை உருண்ட துதிக்கை ஏனோ என்றது பூனை ஊற்று நீரை உறிஞச என்றது யானை திரண்டு நீண்ட பல் ஏன் என்றது பூனை சீறும் புலியைத் தாக்க என்றது யானை இருண்ட மலை பாயாதென்றது பூனை எடுத்தெறிந்தது. பூனையைப் போய் யானை.

இக கவிதையிலே ஒரு பாடமும் இருக்கிறது படமும் இருக்கிறது அதாவது இதைப் படிக்கவும் முடியும் பார்க்கவும் முடியும் வலியாரிடம் வாயாடத் கூடாதென்பது சின்னப் பிள்ளைகள் மட்டுமல்ல பெரியவர்களும் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம்.

ஒருத்தன் அப்படித்தான் ஆற்றங்கரையில் பொறுமையாக உட்காாந்திருந்த இன்னொருவன் அருகே போய் அவன தலையில் குட்டினான. அவுன் இவனைப் பார்த்தான உடனே ஒரு ரூபாவை எடுத்து குட்டியவனிடம் கொடுத்தான் இவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவன் சொன்னான் இந்த ஊரில் இப்படி ஒரு வழக்கம் யாரைக் குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூபா வீதம் கொடுத்து விடுவார்கள் என்று பொறுமையாகச். சொன்னான்.

இவனுக்கோ பெரிய ஆசை ஏற்பட்டு விட்டது உடனே ஊருக குளளே ஓடினான் கொஞ்ச நேரம் கழித்து திரும்பவும் ஓடி வந்தான் அந்த முதல் மனிதனை மறுபடியும் பர்த்தான். உங்கள் பேச்சைக கேட்டு ஊருக்குள் போய் ஒரு பெரிய ஆசாமியைப் பார்த்து அவன் தலையிலே பத்துக் குட்டுக் குட்டினேன். ஆனால அவன் உடனே என்னிடம் இருந்ததை எடுத்து என் கையிலேயே கொடுத்து விட்டான் என்றான்

" என்ன பணமா என்றான் அவன் இல்லை பல்லு என்றான் இவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமுர்த்தி அபி. உத்தியோகத்தர் சங்கத்திற்கு கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு வழங்குவார்கள்

## கனகரட்ணம் எம்.பி. உறுதிமொழி

(காரைநகர்)

வடக்கு-கிழக்கு பெருந்தோட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்திற்கு தமிழ் கூட்டமைபபு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பு எந்நேரமும் கிடைக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவின் பிராந்திய உள்ளூர் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு பெருந்தோட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழப்பாணம்,வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, நுவரேலியா ஆகிய மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகரட்ணம் சிவநாதன் கிஷோர், வினோதரலிங்கம், சிவசக்திஆனநதன் மற்றும் வவுனியா பிரதேச செயலர் செல்வி துரைச்சாமி, வவுனியா மாவட்ட அரசியல துறைப்பொறுப்பாளர் ஞானவேல்,வவுனியா மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் முத்துமுகம்மது ஆகியோரும் மேற்கூறப்பட்ட ஆறு மாவட்ட சமுர்தததி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தற்போது அமைக்கப்பட்ட தொழிற்சங்கமானது தமது உரிமைக்காக பலமாகப் போராடவேண்டும்.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு என்றுமே கிடைக்கும்.வடக்கு-கிழக்கு மாவட்டங்கள் மட்டுமல்லாது மலையகங்களையும் உள்ளடக்கி தொழிற்சங்கம் அமைககப்பட்டிருப்பது மன மகிழ்வைத் தருகின்றது.

நலன்களைப் பாதுகாப்பதற்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் போராடித்தான் ஆகவேண்டும் இந் நிலையில் ஏழை மக்களிற்கு சேவையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கடமை மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பெருந்தோட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவராக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எல் சிறிதரனும், உபதலைவராக நுவரேலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ரவிராம் செயலாளராக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ஜீவானந்தனும,உபசெயலாளராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சோந்த என் அப்துல்லாவும் பொருளாளராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.அருணாகரனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-246)

# செங்கடலில் தத்தளித்தவர்கள் இலங்கையர்கள் என்பது உறுதி

(கொழும்பு)

எகிப்தை அண்மித்த செங்கடல் பிரதேசத்தில் நிராதரவான நிலையில் இருந்தவர்கள் இலங்கையர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கிறது.

தத்தளித்துக்கொண்டிருந்த 137 இலங்கையர்களும் பாதுகாப்பாக இருப்பதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், அவர்களுக்கு தேவையான உணவு வகை மற்றும் தங்குமிட வசதிகளை எகிப்திய அதிகாரிகள் செய்து கொடுத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களுள் அநேகர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கபபடுகின்றது.

வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த் ஒருவர் எகிப்தில் வேலை வாய்ப்புப்பெற்றுத்தருவதாக இவர்களை அழைத்துச் சென்றுள்ளமை விசாரணைகளிலிருந்து கண்டுபிடிக்கபபட்டுள்ளது. கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்ற படகு செங்கடல் பகுதியில் பழுதடைந்ததையடுத்து தத்தளிதது்க்கொண்டிருந்தவர்களை எகிப்தியர்கள் காப்பாற்றியுள்ளனர். உறவினர்கள் அனைவரும் இவர்களுச்கான விமானக் கட்டணங்களை அறவிட்டு அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

# ஆழ்கடல் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது

## என்கிறார் தயாசந்தகிரி

(கொழும்பு)

இலங்கையின் கடற்படையினா ஆழ்கடற் கண் காணிப்புக்களை மிகத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக கூட்டுப்பாதுகாப்புப் படையதிகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிலிருந்து 'ஹர யெஸ்' என்ற கப்பல் கொழுமபுத் துறைமுகத்தை வந்தடைந்தது தொடர்பாக நேற்று இடம்பெற்ற விசேட வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக் கப்பல் அமெரிக்காவினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது இக்கப்பல் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து ஆழ்கடலில் ஆராய்ச்சி தொடாபான ஆய்வுகள் 75 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு இக்கப்பல் 60 ஆயிரம் கோடி ரூபா செலவில நவீனமயபபடுத்தப்பட்டுள்ளதாக தயா சந்தகிரி மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லங்ஸ் ரெட் கருத்துத் தெரிவிக்கும் போது இக் கப்பல் பாதுகாப்புக் காரணங்களுக்காக மாத்திரமல்லாது சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் இக்கபபல்பயன்படுத்தப்படுமென்று நம்பிக்கை தெரிவித்தார். (7)

# இலங்கைக்கு உதவுவதில் அமெரிக்கா பெரும் ஆர்வம்

(கொழும்பு)

அமெரிக்காவில் இருந்து மேலும் இலங்கைக்கு உதவிகள் கிடைத்து வருகின்றது. இந்த உதவிகள் பற்றி மேலும் கலந்து ஆலோசிப்பதற்காக அமெரிக்க மிலேனிய ஸ்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான போல் அப்போகிறப் இன்று இலங்கை வருகினறார்.

அவர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி வறுமை ஒழிப்பு முயற்சிகள் குறுகிய கால நீண்ட கால புனரமைப்பு திட்டங்கள் தொடர்பாக ஆராய்வார்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இவர் ஜனாதிபதி உள்ளிட்ட அரச தரப்பு முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார்.

தனியார் துறை சிவில் சமூக ஸ்தாபனங்கள் அரச சார்பறற நிறுவனங்கள் சாவதேச நன்கொடை அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளோடும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இதேவேளை, இவர் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கும் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# சரக்குக் கப்பலில் தீ விபத்து

(கொழும்பு)

தூத்துக்குடி அருகே 30 கடல் மைல் தூரத்தில் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ காரணமாக கப்பலின் ஒரு பகுதி எரிந்து சாம்பாலாகியுள்ளது.

கொழும்பிலிருந்து தூத்துக்குடியை நோக்கிச் சென்ற எக்ஸ்பிரஸ் காவேரி என்ற சரக்குக் கப்பலே இவ்வாறு தீ விபத்துக்குள்ளானது 30 கடல் மைல் தொலைவில் மன்னார் வளைகுடா பகுதியில் கப்பல் வந்துகொண்டிருந்த போது தீடீரென கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது.

இது தொடர்பாக தூத்துக்குடித் துறைமுகத்திற்கும கடலோரக் காவற்படைக்கும் கப்பலில் கப்டன் தகவல் தெரிவித்ததை அடுத்து துறைமுகத்திலிருந்து 2 கப்பல்களில் தீயணைப்புப்படை வீரர்கள் விரைந்தனர் அதே நேரம் கரையோரக் காவற்படைக் கப்பலும் விரைந்து சென்றது.

தீயணைப்பு வீரர்களின் பல மணி நேரப் போராட்டத்தின பின் தீ அணைக்கப்பட்டது.

ஆயினும் இவ் விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7-9)

# கழிவுப் பொருட்களை வீதிகளில் போடுவதால் சூழலுக்கு பாதிப்பு

## நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் கவலை

(சுதுமலை)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளான திருநெல்வேலி மற்றும் கொக்குவில், கல்வியங்காடு பிரதேசங்களில் உள்ள பொதுமக்கள் கழிவுகளை வீதிகளில் போடுவதனால் வீதிப் போக்குவரத்துக்கும் சுற்றுபபுறச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து கவலை தெரிவித்தார்.

கடந்தவாரம் இப்பகுதியில் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில பிரதேச செயலக சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர், உபஅலுவலக பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டு சுற்றுப்புற சூழலின் உரிமம் தொடர்பாக முக்கிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

செயலாளர் மேலும் தெரிவித்ததாவது, பிரதேச சபைக்குத் தினமும் கட்டடங்கள் சூழல் மாசுபடுதல் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன.

இதனைத் தவிர அனுமதிபெறாது கட்டப்படும் கட்டடங்கள் வதியில் அமையும் கட்டடங்கள் எனப் பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்தவண்ணம் உள்ளன.

ஆனால் எமது சபையில் ஆளணிவளமோ, கழிவகற்றும் உபகரண வளங்களோ மிகக்குறைவாகவே உள்ளன.

எனவே உள்ள வளங்களைக் கொண்டு உயர்ந்த பட்சவேலைகளைத் தான் எம்மால் செய்யமுடிகிறது இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் அவசியம்.இதனைத்தவிர பலவியாபாரிகள் எதுவித உரிமத்தையும் பெறாது நடாத்தப்பட்டு வருகின்றது.

எனவே சூழல் உரிமம் மிக முக்கியமானது. பிரதேச சபையில் இதற்கான விண்ணப்பம் எதிர் வரும் மாதம் 10 ம் திகதியிலிருந்து வழக்கப்படும். அதற்காக எம்மால் அமைக்கப்பட்ட குழு பரிசோதனைகளை மேற்கெண்ட பின் அறிக்கையின் பிரகாரம் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படும் என செயலாளா் மேலம கெரிவிக்காா். (க-252)

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு - குறள்

வலம்புரி

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைய வேண்டும்

சுனாமி ஏற்படுத்திய பேரழிவிருந்து இன்னமும் மக்கள் மீளாத நிலையில் மீண்டும் சுனாமி ஏற்படும் ஆபத்துக் குறித்து எச்சரிக்கைகள் வெளியாகியுள்ளன.

இயற்கையின் சீற்றம் தந்த அழிவு ஏன்? எதற்காக? என்ற கேள்விகளுக்கு முழுமையான பதில் கிடைக்காத நிலையில் மீண்டும் மீண்டும் இயற்கை சீற்றம் கொள்வது ஊழிக்காலத்து அறிகுறியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பமே ஆழிப் பேரலையாக உருவெடுத்தது என்று விஞ்ஞானிகள் விளக்கம் கூறுவர். இன்னொரு சாரார் வல்லரசு நாடுகள் கடலுக்கு அடியில் நடத்திய அணு ஆயுத சோதனைகளின் விளைவே சுனாமி என்பர். இதை விஞ்ஞான- அறிவியல் தரப்பில் முன்வைக்கப்படுகின்ற கருத்து.

இவ்வாறு முன்வைக்கப்படுகின்ற பல கருத்துக்களுக்கு அப்பால் ஆய்வு நிலையில் பரீட்சிக்க முடியாத கருத்தும் இருக்கவே செய்கின்றது. அக் கருத்து என்னவெனில்,

மக்கள் அறநெறிகளை மறந்து சுயநல நோக்கோடு அதர்மம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். இதனால் தெய்வத்தின் கோபத்திற்கு மனித இனம் ஆளாகிவிட்டது. அதன் விளைவே சுனாமி என்று கூறப்படுகிறது. ஏற்கனவே கூறப்பட்ட பூகம்பம் அணு ஆயுத பரீட்சிப்பு போன்றவை ஆய்வு நிலையில் பரீட்சிக்கப்பட்டு அறியக்கூடியவை. ஆனால் இறுதியாகக் கூறப்பட்ட "தெய்வத்தின் கோபம்" என்பது ஆய்வுக்குரியதன்று. எனினும் அது ஆய்வுக்குரியதல்ல என்பதற்காக அந்தக் கருதுகோளை அப்படியே ஒதுக்கிவிட முடியாது.

விஞ்ஞான தொழில்நுட்பம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்தாலும் ஆத்மீக ரீதியான கருத்துக்கள், சிந்தனைகள், தத்துவங்கள் மக்களிடையே நிலை பெற்றுள்ளன. எனவே மெய்யியல் ரீதியான இந்தக் கருத்துக்களை அடியோடு வெட்டிச் சாய்க்காமல் அதுபற்றி சீர்தூக்கி ஆராய்வதும் தேவையானதென்பதை உணருகின்ற இயற்கையின் சீற்றம் வலியுறுத்துகின்றது.

நடந்து முடிந்த ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளுக்கு அப்பால் அது மேலும் ஓர் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. அதாவது, ஆழிப் பேரலைக்கான காரணத்தை விஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா? முன்வைக்கப்போகின்றது என்பதே அந்தப் பிரச்சினை ஆகும்.

தெய்வத்தின் கோபமே ஆழிப் பேரலைக்கான காரணம் எனக் கூறப்படுமாயின் பச்சிளம் பாலகர்கள் பலியானதேன்? என்ற கேள்வியை விஞ்ஞானிகள் எழுப்புவர்? அவ்வாறானதொரு கேள்வி எழுமாயின் அது நியாயமானதென்றே கருதப்படும். எனினும் விஞ்ஞானத்தால் முன்வைக்கப்படுகின்ற இக் கேள்விக்கு மெய்ஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்பவர்கள் விளக்கம் தராமலும் இல்லை. மண் பாவப்பட்டுப் போனால் அழிவு எல்லோருக்குமே. அதுவே நியதி என்று விளக்கம் கூறுவர்.

இவ்வாறு விஞ்ஞான, மெய்ஞ்ஞான விளக்கங்கள் முட்டிமோதிக் கொள்ளலாம். ஆனால் இறுதியில் யார் வெற்றி கொள்வார்கள் என்பதை தீர்மானிப்பது மீண்டும் ஓர் சுனாமி ஏற்படுவதை யார் தடுப்பார்களோ அவர்களே வெற்றி பெறுபவர்களாக இருப்பர். அப்படியானால் மீண்டும் மீண்டும் சுனாமி ஏற்படும் அறிகுறி இருப்பதை விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே விஞ்ஞானம் சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறிகளைக் கண்டறிந்து எச்சரிக்கை செய்ய இயற்கையை பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இணைந்து செயலாற்றுகின்ற போதே இயற்கையின் சீற்றம் கட்டுப்படுத்தப்படும்.

இங்கு விஞ்ஞானத்தின் பங்களிப்பில் அதீத வளர்ச்சி கண்டுள்ள நாடுகளின் ஒத்துழைப்பு தாராளமாக தேவையாகும். நமது நாட்டில் சுனாமியின் தாக்கம் ஏற்படாது என்பதற்காக அதுபற்றி அக்கறை கொள்ளாது இருப்பது மனித இனத்திற்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

அதேநேரம் சுனாமி பற்றிய எச்சரிக்கையை முன் கூட்டியே மக்களுக்கு அறிவிப்பதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும். விஞ்ஞானிகளும் அரசுகளும் சுனாமியின் தாக்கம் பற்றிய எச்சரிக்கைகளை அறிவித்துக்கொள்ள, பொது மக்கள் இறைவா! உன் சீற்றத்தை தணித்துக் கொள் என வேண்டுகோள் செய்யவேண்டும். அந்த வேண்டுகோளுக்கு அமைவாக நீதி, நேர்மை, நடுநிலை என்ற நேரிய பாதையில் - அறநெறியில் தம்மை வழிநடத்திச் செல்ல வேண்டும். இவ்வாறு அறநெறியில் மனித வாழ்க்கை பயணிக்கும்போது இயற்கையின் சீற்றம் தணிந்து போகும். இது உறுதி.

# போராட்டத்தை மேலும் விஸ்தரிக்க பல்கலைக்கழக ஊழியர்கள் முஸ்தீபு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர்கள் நடாத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டம் இன்றுமுதல் விஸ்தரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பணமோசடி,குற்றச்சாட்டு உட்பட்ட உயர் அதிகாரிகள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக ஊழியர் சங்கம் துணைவேந்தருடன நடாத்திய பேச்சுவார்த்தை பலனளிக்காத நிலையில் கடந்த வியாழக்கிழமை முதல் நடத்தப்பட்டு வரும தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்தும் நடத்தவுள்ளதுடன் இன்று முதல் இப் போராட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும் என பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணச சமூகத்துடன் கலந்துரையாடல் நடத்துவதை தாங்கள் மீண்டும் மீண்டும் தவிர்க்க முனைவது பதிவாளர் தொடர்பாக தாங்கள் மேற்கொள்ள முனைந்திருககும் நடவடிக்கைகள் நியாயமற்றவை என்பதையே வெளிக்காட்டுகின்றன.

தாங்கள் 23.03.2005கடிதத்தில சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இக்கலந்துரையாடலில் பங்கேற்க விரும்பவில்லை என உண்மைக்குப்புறம்பான கருத்தொன்றைத் தெரிவித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும். இவ்விடயம் தொடர்பான எம்முடனான எச்சந்திப்பிலும் விசாரணை அறிக்கையின் அம்சங்களை வெளிப்படுத்த தாங்கள் தவறியிருந்திருந்தீர்கள். இந் நிலையில் எமக்குப் போதிய விளக்கம் அளித்ததாகக் குறிப்பிட்டுள்ளமையும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

பேரவை நடவடிக்கைகளில் மிகுந்த அனுபவமுள்ள பேராசிரியர்கள் மற்றும் மனிதநேய அமைப்புகள், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை முன்னிலையில் இவ்விடயம் தொடர்பான தங்கள் நடவடிக்கைகளை தாங்கள் நியாயப்படுத்தும்வரை எமது போராட்டம் தொடரும். நாளை முதல் அது மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர்கள் தொடர்சசியாக மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் இன்று முதல் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ள நிலையில், பல்கலைக்கழக ஊழியர் சங்க உறுப்பினர்களை உடனடியாக கடமைக்கு திரும்புமாறு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கேட்டுள்ளார்.

பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக பல்கலைக்கழக மூத்த பேராசிரியர்கள் மற்றும் மனிதநேய அமைப்புகளுடன் கலந்துரையாடலை நடத்துவதற்கு பீடாதிபதிகளும், ஏனைய பேரவை உறுப்பினர்களும விருப்பம் தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டு அவர் பல்கலைக்கழக ஊழியர்சங்கத்தலைவருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார். (க)

## ஆயுள்வேத வைத்தியசாலைகள் கட்டம் கட்டமாக அபிவிருத்தி

(கொழும்பு)

ஆயுள்வேத வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைபபடுத்துவதற்கு சுதேச மருத்துவத்துறை அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் நான்கு கட்டத்தில் 41வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. முதற கட்டமாக, 28 கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைகளும், இரண்டாம் கட்டமாக 2மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலைகளும், மூன்றாம் கட்டமாக 8 மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளும், நான்காம் கட்டத்தில் மத்திய அரசின் கீழ் செயற்படும் 3 ஆயுளவேத வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகளை வழங்கவும் சுதேச. மருத்துவத்துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 1142 பேருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடமததிய மாகாணத்தில் கடமையாற்றும சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆயிரத்து 142பேர் அண்மையில் நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அநுராதபுரம் யொவுன் நிகேதனையில் அண்மையில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திஸாநாயக்க தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்ற போது இவர்களுக்கு நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சமுர்த்தி அப்விருத்தி பிரதிஅமைசசர் ரோஹன திஸாநாயக்க, நிபுணத்துவ அபிவிருத்திப் பிரதி அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, மாகாண சுகாதார அமைச்சர் கமகே வீரசேன, அநுராதபுரம் அரசாங்க அதிபர் யு.டி.யாப்பா, மேலதிக அரசாங்க அதிபர் எச்.எம்.கே.ஹேரத், சமுர்த்தி செயலாளர் டபின்யூ. எம்.யஸபால, சமுர்த்தி உதவிப் பணியாளர் கருணாபால ஆகியோரும் இவவைபவத்தில் கலந்து கொண்டனர். (க-9)

# இன ஒற்றுமையை ஏற்படுத்த ஊடகத்துறையால் முடியும்

(கொழும்பு)

பல இன மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த ஊடகத்துறை அரும்பணியாற்ற முடியுமென்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரச ஊடகங்கள் அனைத்திற்கும் ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோருக்கும் ஊடகங்களில் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. அரச மற்றும் தனியார்துறைகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கும மற்றும் சுதந்திரமாகச் செயற்படும் ஊடகவியலாளர்களுக்கும் நிதியுதவியை வழங்கவென சர்வதேச ஊடகவியலாளர் சங்கத்தின் அனுசரணையுடன், ஊடகவியலாளர் தொழிற் சங்க சம்மேளனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் இதற்கென 20ஆயிரம் டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (7)

## விடுமுறை எடுக்காதோருக்கு விசேட ஊக்குவிப்புப்படி

(சாவகச்சேரி)

அரசஅலுவலர் ஒருவர் பெற்றுக்கொள்ளாத விடுமுறைகளுக்காக ஊக்குவிப்புபடியை பெற்றுக்கொள்ளல் தொடர்பான அரச நிர்வாகச் சுற்றறிக்கை ஒன்றை அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க சகல அமைச்சுக்களினதும் மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

2005 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் ஊக்குவிப்புப்படி, அரச ஊழியர் ஒருவர் உரித்தான விடுமுறைகள் எல்லாவற்றினையும் பயன்படுத்தாது சேவையற்றுவதை ஊக்குவிக்கும் அடிப்படையில் அமைந்தது.

வருடாந்தம் அரசஅலுவலர் பெற்ற விடுமுறைகள் அடுத்த ஆண்டு ஜனவரி 31ற்கு முன் உரிய படிவத்தில் தரவுப்படுத்தப்பட்டு அலுவலர் ஓய்வுபெறும் வேளையில் ஒருநாள் சம்பளத்தின் முப்பதில் ஒருபங்கு ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிக்கள அலுவலர் தவிர்ந்த ஊழியர்கள் கடமையல்லாத விடயங்களிற்கு வெளியே செல்வதை பிரத்தியேக விடுமுறையாக கணித்தல வேண்டுமெனவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(7-21)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஜபம், தியானம், சத்சங்கம், சாஸ்திரங்களை வாசித்தல் இவற்றில் உன்மனதைச் செலுத்து. ஒவ்வொருநாளும் இந்தசாதனங்களை தவறாது தொடர்ந்து செய்ய வேண்டும்.

சயநலம் கருதாது சேவைசெய்வதன் மூலமும் உன்னிடம் உள்ளதை பிறரிடம் பகிர்ந்து கொள்வதன் மூலமும் தவறாது சாதனம் செய்வதன் மூலமும் இறைவன் புகழை பாடிக்கொண்டு ஆனந்தமாக வாழ்க்கையை நடத்து.

சுவாமி விவேகானந்தர்

# இந்தோனேசியா நில நடுக்கத்தில் சுனாமி பேரலை ஏற்படாதது ஏன்?

## இந்திய புவியியல்துறை ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவை ஒட்டிய கடற்பகுதியில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் விளைவாக சுனாமிப் பேரலைகள் உருவாகி தாக்கத்தை ஏற்படுத்தாது ஏன் என்று புவியியல்துறை வல்லுநர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இந்தியத் துணைக் கண்டத்தை தாக்கியுள்ள பெரும் பாறை, பர்மா பாறையின் மீது மோதியது. இந்த மோதல் கிழக்கு-மேற்காக நிகழ்ந்தது. அதன் காரணமாக பெருங்கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு சுனாமிப் பேரலை உருவாகி தென்கிழக்கு ஆசியாவைத் தாக்கியது.

ஆனால் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் பர்மாப் பெரும்பாறையின் மீது அவுஸ்ரேலியப் பெரும்பாறை மோதியதால் உருவானது என்றும், இந்த மோதல் வடக்கு - தெற்காக நிகழ்ந்தத்ன் காரணமாக உருவான சுனாமிப் பேரலைகள் அவுஸ்ரேலியாவின் கோக்கர்ஸ் தீவுகளை மட்டும் தாக்கியதாக சென்னைப் பல்கலைக்கழக புவியியற்துறை ஆய்வாளர் வேங்கடநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலநடுக்கத்தின் மையம் சுமாத்ரா தீவை ஒட்டிய மேற்குக் கடற்பகுதியில் உள்ள நயாஸ் எனும் தீவிற்கும், சிமியூலு தீவிற்கும் இடையே இருந்ததால் அதன் தாக்கம் முழுவதும் அந்த இரு தீவுகளின் இடைப்பட்ட பகுதியிலேயே அடங்கிவிட்டது.

இதனால்சுனாமிப் பேரலைகள் உருவாக வில்லை என்று அவர் கூறினார்.

இவ்விரு தீவுகளுமே இந்தப் பயங்கர நிலநடுக்கத்தினால் கடுமையாகப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின்போது வெளிப்பட்ட சக்தி அளவிற்கு நிலநடுகத்தின் போது வெளியாகவில்லை. எனினும் பெரிய அளவிற்கு கடல் கொந்தளிப்பு உருவாகாததால் சுனாமி ஆபத்து ஏற்படவில்லை என்று வேங்கடநாதன் கூறினார்.

இதுஇவ்வாறிருக்க எதிர்வரும் மூன்றுமாத காலப்பகுதிக்குள் சுனாமிப் பேரலைகள் போன்ற தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலநடுக்கம் ஒன்று ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக புவியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடலொன்று இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துப்பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் என்.செல்வக்குமார் கேட்டுள்ளார். (ச)

### ஐ.நா.செயலர்...

வுறுத்தியுள்ளது. ஐ.நா.சபையில் பொறுப்பு வகித்த ஜயந்ததன பாலவின் பெயரை நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அறிவித்தார். தற்போதைய ஐ.நா. செயலர் நயகம்கோபிஅனானின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு இறுதியில் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இருவாரத்தினுள் அரசின்முடிபு வெளியாகும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து முடிவினை எடுக்கவுள்ளார் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற சுனாமியினால் பாதிப்புற்றமக்களுக்கு நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த முடிவுகள் இருதசாப்த காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினை உட்பட பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமையும்.

மக்களின் எதிர்பார்ப்பு சமாதானத்தின் பால் இருந்தாலும் அதனை அடைவதற்குமுன் சுனாமியினால் பாதிக்கப்பட்டமக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் முகமாக பொதுக்கட்டமைப்பொன்றினைஉருவாக் குவதிலேயே தற்போது திரும்பி யுள்ளது எனவேபொதுக்கட்மைப்பு ஒன்றினை உருவாக்குவதன் மூலமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை அடைய முடியும்என தமிழீழவிடுதலைப் புலிகளும்அரசாங்கமும் நம்புகிறது (4)

### செங்கடலில்...

சமரதுங்க தெரிவித்தார். வென்னப்புவப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் எகிப்தில் வேலை பெற்றுத் தருவதாகஇவர்களை அழைத்துச் சென்றுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கொழும்பிலிருந்து' புறப்பட்டுச் சென்ற படகு செங்கடல் பகுதியில் பழுதடைந்ததால் அவர்கள் தத்தளித்தனர். அனைவரையும் எகிப்தியர்கள் காப்பாற்றியுள்ளனர். செங்கடல் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட137 இலங்கையர்களில அதிகமானவர்கள் நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. உறவினர்கள் மூலம் இவர்களுக்கான விமானக் கட்டணங்கள் அறவிடப்பட்டு அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்துவருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# புலிகள் மீதான தாக்குதல்களை நிறுத்த சர்வதேச சமூகத்தின் அழுத்தம் தேவை

## யாழ்.மாவட்ட பொதுஅமைப்புகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களில் தமிழர் தாயகத்தில் இராணுவத்தினராலும், தேசவிரோதக் கும்பல்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளினதும், பொதுமக்களினதும் படுகொலைகளையும், காட்டுமிராண்டித்தனமான அச்சுறுத்தல்களையும் யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

போருக்கு ஓய்வுகொடுத்து அமைதிவழியில் அரசியல் தீர்வு காணும் நெஞ்சுறுதியுடனும் புலிகள் இயக்கம் அரசியல் என்னும் மக்கள் பணியாற்றிவருவதை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொண்டு ஆதரவு வழங்கிவருகின்ற இவ்வேளையில், அரசின் அதிகட்டுப்பாட்டுப் பகுதியில், அதுவும் படையினரின் முகாம்களுக்கு அருகாமையில் அவர்களின் முழுமையான ஆதரவுடன் படுகொலைகள் அரங்கேறிவருவது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தையும், கட்டுமீறிய கோபாவேஷத்தையும் தூண்டிநிற்கிறது.

கிழக்கில் புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமுக்கு உணவுகொடுத்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போராளிகள் இருவர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனும், உறுப்பினர் ரதனும் விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்கள்.

இது ஒரு சாதாரண விடயமாக சர்வதேசமும், அரசும் நியாயப்படுத்திவிடமுடியாது. இதனால் ஏற்படப்போகின்ற பாரதூரமான ஆபத்தான நிலைமையை அரசு புரிந்துகொள்ளுகின்ற நிலையில் இல்லை. இதற்கான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டியது சர்வதேச சமூகத்தினதும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினதும் பாரிய பொறுப்பாகும்.

இந்த அநீதிகளுக்கான அட்டூழியங்களை, படுகொலைகளைக் கண்டிக்கவும், மக்கள் தமது துறை சார்ந்த தீவிர எதிர்ப்பையும் கண்டனத்தையும் பேரணியூடாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிக்காட்ட தம்மைத் தயார்ப்படுத்தி வருகிறார்கள் என்பதையும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டன அறிக்கை மூலம் சுட்டிக்காட்டுகின்றதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)

இல.45 புவனேஸ்வரி அம்பாள் வீதி அரியாலை மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (2005-03-29) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டாரர்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நாகமுத்து-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புனிதவதி மற்றும் மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தம்பு, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் மைத்துனரும், சிவகுமாரன் (எழுதுவினைஞர், யாழ்.பல்கலைக்கழகம்), தூயகுமாரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்), யோகமலர், மல்லிகாமலர் (லண்டன்), புனிதமலர் (லண்டன்), குசலகுமாரன் (ஹொலண்ட்), சந்திரமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்.

நவரத்தினம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.மாநகரசபை), புவனேஸ்வரன் (லண்டன்), கெங்காதரன் (லண்டன்), ஞானசீலன் (லண்டன்), தியாகவதி (ஆசிரியர் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்), ஹேமநந்தினி (சங்கீத ஆசிரியர் கொழும்புத்துறை சென்யோசப் வித்தியாலயம்), விமலினி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும்.

பபிஸ்ரா, பிறேமானந்த், காலஞ்சென்ற போல் கஜேந்திரன், மற்றும் டொறின் ரேணுகா, றெஜினோல்ட் டினேஸ்காந்த், பேணாட் ரிஷாந்த், போல் கஜேந்திரன், சிவானுஜா, சிவானுஜன், பவானுஜன், சிவகஜேந்திரன், திர்சா (ஹொலண்ட்), ரேக்ஷின் (ஹொலண்ட்), பானுப்பிரயா, (லண்டன்), மகிழன் (லண்டன்), அனுஜன் (லண்டன்), லக்சிகா (லண்டன்), நந்துஜன் (லண்டன்), பிறின்சியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.03.2005 புதன்கிழமை (இன்று) முற்பகல் 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரீயைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல:45,புவனேஸ்வரி
அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்.
வே.சிவகுமாரன்,(மகன்)
(எழுது வினைஞர்,யாழ். பல்கலைக்கழகம்)

(c-9508)

### விடுதலைப்புலிகள்.....

வியன்னாவில், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை நேற்று முன்தினம் சந்தித்தபோது தமிழ்ச்செல்வன் தனது விசனத்தைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதும் அரசியல்துறை அலுவலகங்கள்மீதும் அண்மைக்காலமாக தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தாக்குதல் சம்பவங்களானது, சமாதான முயற்சியில் பற்றுறுதியுடன் செயற்பட்டுவரும் விடுதலைப் புலிகளைப் போருக்கு வலிந்திழுக்கும் நடவடிக்கையாகும் என தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீது இடம்பெற்ற ஒவ்வொரு சம்பவங்கள் குறித்தும் அவர் எரிக்சொல்ஹெய்முக்கு விளக்கிக் கூறினார். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் நோர்வையைக் கேட்டுள்ளார்.

இதேவேளை சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவும் இருவரும் விரிவாகக் கலந்துரையாடி உள்ளனர். (ச)

### கரேஜஸ்...

இக்கப்பல் நேற்றே கொழும்பை வந்தடைந்தது. தற்பொழுது பி-621 எனப் பெயர்மாற்றப்பட்டுள்ள இக்கப்பலில் உலங்கு வானூர்திகளை இறக்கக்கூடிய வசதிகள் உள்ளதாகவும் இது இலங்கையை சூழவுள்ள சர்வதேச கடல் பரப்பில் பணிகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### புலிபாய்ந்த...

முன்றலில் அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றது.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய அதிபர் பொன்னையா தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை - தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி அருச்சுனாவும், ஈகைச்சுடரினை மாவீரனின் சகோதரனும் ஏற்றினார்.

தாயார் மலர்மாலை அணவித்ததைத் தொடர்ந்து அகவணக்கமும் நினைவுரைகளும் இடம்பெற்றன.

பின்னர் பாடசாலை மாணவர்களின் பாண்ட்வாத்திய அணிவகுப்புடன் வித்துடல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர்துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப. 2 மணியளவில் விதைக்கப்பட்டது.

(ச-101-04-08)


நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
29.03.2005 முதல்
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த
ஏய்
குளிரூட்டப்பட்டது
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
விரைவில்
குருதேவா

நிறைஞ்சனாஸ்
சங்கானை
29.03.2005 முதல்
மாதவன், சதா, விவேக் நடித்த

எதிரி
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா சினிமா
யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த

கண்ணாடிப் பூக்கள்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (ரீல்ஸ்)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்30.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.